
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI




| மலர் 07 | சுபானு - மாசி | FEBRUARY - MARCH 2004 | இதழ் 11 |
|---|---|---|---|

ரூபா 25/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

*C. Navaneethakumar*
No30,Ramya Road, Colombo-04.
Sri Lanka.
TPhone No: 2580458

# பொருளடக்கம்

பக்

01. சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய கோயிற்திருப்பதிகம்.....02

02. மனிதப் பிறவி.....04

03. சைவ பூஷணர்.....08

04. சைவசித்தாந்த சாத்திர ஆசிரியர்கள்.....11

05. மனித வாழ்க்கையும் சமய ஒழுக்கமும்.....17

06. வேதங்கள் கூறும் வாழ்வுக் கோட்பாடு.....19

07. கந்த புராணக் காப்பு.....21

08. ஆரோக்கியம்.....24

**சந்தா நேயர் கவனத்திற்கு**

* உரிய காலத்தில் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் 7 சுபானு - மாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 11

தொடக்குனர்:
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
திரு. வ. செல்லையா

மதியுரைஞர்:

சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman U.P.S.

திரு. கு. மகாலிங்கம்

பதிப்பாசிரியர்:
திரு. வே. திருநீலகண்டன்
லக்ஷ்மி அச்சகம்

விநியோகம்:
திரு. க. சீனிவாசகம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு. செ. நவநீதகுமார்
30, ரம்யா ரோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 2580458

## வாழ்வு வளம் பெற வழி

மனம்போல வாழ்வு என்பார்கள். அதாவது எமது வாழ்வு எம்மன நிலைவிற்குத் தக்கவாறு தான் அமையும். நல்ல நினைவுடன் இருந்தால் அதாவது பிறரும் நன்றாக வாழவேண்டும், அவர்களுக்கு கெடுதல் எதுவும் வரக் கூடாது என்ற நினைவுடன் இருந்தால் எமது வாழ்வும் வளம் பெறும்.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்பது முதுமொழி. பிறருக்குக்கேடு செய்ய நினைப்பவன் தான் கெடுவான். எனவே நல்ல நினைவை மனதில் வளர்த்து மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மனதை அழுக்கேறா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். துணியில் அழுக்கேறினால் தோய்த்துக் கொள்ளுவோம். பல் அழுக்கேறா வண்ணம் தினமும் விளக்குகிறோம். மனம் மாசுபடிந்திருக்கிறது. அந்த மாசை எவ்வாறு நீக்குவது?

மனதிலே மாசு இல்லாது இருத்தல் அனைத்து அறமும் ஆகும். தோய்க்காத துணியில் அழுக்குப்படிவது போல அறநூல்களைப் படிக்காத, அறவுரைகளைக் கேளாதவர் மனதில் மாசு படியும்.

மாசு உடைய மனத்தவர் எண்ணங்கள் எதுவும் நிறைவேறாது. மாசிலா மனத்தவர் நினைத்த கருமங்கள் இறையருளால் இலகுவில் கைகூடும். மாசிலா மனத்தவர் மனத்தில் இறைவன் எழுந்தருளி யிருப்பான்.

நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்.

நாம் நம் மனத்தால் அன்புடன் பிறரை மதித்தால் அவர்களும் எம்மை மதிப்பளிப்பார்கள். நாம் வெறுப்புடன் பிறரை நோக்கினால் அவர்களும் நம்மை வெறுப்பார்கள்.

மாசிலா மனத்தார்க்கு நல்ல மக்கட் செல்வம் கிடைக்கும். "மனத்தூயார்க்கு எச்சம் நன்றாகும்" என்பது வள்ளுவர் வாக்கு.

எனவே ஊரார் நலமாக வாழ வேண்டும். உலகோர் நலமாக வாழ வேண்டும், உயிர்கள் யாவும் இன்புற வேண்டும் என்று நினைப்பதன் மூலம் எமது வாழ்வையும் வளமாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## அகத்தியர் தேவாரத் திரட்டு

## ஊர்த்தொகை

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஏழாந்திருமுறை

### கோயிற்றிறன்

திருப்பாண்டிக் கொடுமுடி

பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே
கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப்
பாடப் பணியாயே. 1

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய்
குழகா குற்றாலா
மங்குல் திரிவாய் வானோர் தலைவா
வாய்மூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா அழகா
அவியா அனலேந்திக்
கங்குல் புறங்காட் டாடீ அடியார்
கவலை களையாயே. 2

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே
நின்றி யூரானே
மிறைக்காட் டானே புனல்சேர் சடையாய்
அனல்சேர் கையானே
மறைக்காட் டானே திருமாந் துறையாய்
மாகோ ணத்தானே
இறைக்காட் டாயே எங்கட் குன்னை
எம்மான் தம்மானே. 3

ஆரூ ரத்தா ஐயாற் றமுதே
அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற்
கருகா வூரானே
பேரூ ருறைவாய் பட்டிப் பெருமான்
பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய்
பாசூர் அம்மானே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருகல் லுறைவாய் மாகா ளத்தாய்
மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் னடியார் மேலே
அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே
கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப்
பவளப் படியானே. 5

தாங்கூர் பிணிநின் னடியார் மேலே
அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய்
விடையார் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்
நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா
பழனப் பதியானே 6

தேனைக் காவல் கொண்டு விண்ட
கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார்
அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே
அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை
உகப்பார் உணர்வாரே 7

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய்
சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப்
பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கயிலாயா
அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள்
அகல அருளாயே 8

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப்
போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற
புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான்
கடர்த்த மதிசூடி
கலிசேர் புறவிற் கடவூ ராளீ
காண அருளாயே. 9

மைம்மா வுரிவை யம்மான் காக்கும்
பலவூர் கருத்துன்னி
கைம்மாந் தடங்கண் மதுரம் அன்ன
மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன் சிறுவன்
அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார்
சிவலோகத்தாரே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# மனிதத்துப்பிறவி

முருகவே பரமநாதன்

விஞ்ஞானம் மனிதனைச் சமூகப்பிராணி, இருகால் விலங்கு, சமூகவிலங்கு, அரசியல் விலங்கு என வர்ணிக்கிறது. மனிதன் தன் நிலையில் இருந்து விலகும் போது விலங்காகிறான். விலங்கு என்றால் மிருகம் என்று பொருள். டார்வினின் பரிணாமச் சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே குரங்கிலிருந்து பிறந்தவன் எனப்படுகிறார்கள். மனிதரிலே, விலங்குப் போக்கு, பரம்பரையமைப்பு, தாவரப்பான்மை இருப்பதால் அவனை அப்பாகத் தரத்தில் வைத்துப் பாடியும் எழுதியும் உள்ளனர். வள்ளுவனார் கல்வி கற்றவனையும் கல்லாதவனையும் ஒப்பீடு செய்து ஒரு குறள் தந்திருக்கிறார்.

"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரொடு ஏனையவர்." (குறள் 410)

மனிதன் மிருகம் இரண்டையும் படித்தவன் படியாதவன் இருவரோடும் பொருத்திப் பார்க்கிறார்கள். "சபை நடுவே நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" என்றார் ஒளவைப்பாட்டி. சற்று முன்னேறிய தாயுமானார் தன்னை இரு கால் மாடு என உவமித்துள்ளார்.

"விளையாதோ எந்நாளும்? பேரானந்தத்
தெள்ளமுதம் உதவாமல் திவலைகாட்டி
வலைக்குள் அலைக்கழித்தாய், உண்டுடுத்து
வாழ்ந்தேன் நான் இரண்டுகால் மாடுபோல"
(தாயுமானவர் பாடல்கள்-1) செற்றவுட்கேல்

இன்று மனித குல மாண்பு மங்காமற் காக்க முயற்சிகள் முன்னெடுக்கப் பலர் முயல்கின்றனர். மனித நேயம் பட்டுப் போன நிலைதான் தென்படுகின்றது. டார்வினின் கூர்தலறம் (உள்ளது சிறத்தல்) வருவதற்கு பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்திலே உயிர் இனங்களை ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு, ஆறறிவு உயிர்களெனத் தன் திறனாய்வில் கண்டு, வகுத்துக் காட்டியுள்ளார்.

"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே."
(பொருளதிகாரம்-மரபியல் நூற்பா27)

இப்பாவின் பொருள்: ஓரறிவுள்ள உயிர் உடம்பினால் அறியக்கூடியது. ஈரறிவுள்ள உயிரென்பது உடம்பினாலும் வாயினாலும் அறியக்கூடியது. மூவறிவு உயிராவது

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது　481

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினால், வாயினால், மூக்கினால் என மூன்றினாலும் அறியக்கூடியது. நான்கறிவாவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றினால் அறியக்கூடிய பிராணிகள். ஐவகை அறிவுடையிர் என்பது மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து உறுப்பினாலும் அறியக்கூடியது. இவைகளை யன்றி "மனம்" என்னும் ஆறாவது அறிவினைக் கொண்டதுதான் மனிதம். இதுவே பகுத்தறிவு. எனவே மனதை உடையவன் மனிதன் என அழைக்கப்பட்டான். ஆக ஆறறிவு படைத்தவர் மனிதர். இதிலோர் அறிவு குறைந்தால் மாக்கள் என அழைக்கப்படுவர். மாவும், மாக்களும் ஐ அறிவினவே என்பது தொல்காப்பியம். பின்னாலே வந்த பட்டுக் கோட்டையார் ஆறறிவில் ஓரறிவு (போ)கவிட்டு, அதுவுமே இருக்குமென்றால் அதுவும் டவுட்டு (Dought) என்று பாடினார். ஆறறிவு படைத்தவன் மனிதன். இது நன்று, இது தீது என்று எனப் பகுத்துப் பார்த்து நல்வழியில் தன்னை வழிப்படுத்துவதே அறிவு. இயல்பறிவு, கல்வியறிவு, பட்டறிவு, உய்யறிவு என வாழ்வின் பல அறிவின் சேர்க்கை மனிதனை வழிப்படுத்துகிறது. இவ்வாறறிவு உயிர்களை ஓர்ந்து பார்த்து தொல்காப்பியனார் ஒவ்வொரு சீவ ராசிகளையும் பற்றிப் பேசுகின்றார்.

"புல்லும் மரமும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே"

(பொருளதிகாரம், மரபியல் நூற்பா28)

புல், மரம் என்பன இரு தாவரமும் உடம்பால் அறிந்து கொள்ளும் ஓரறிவு உயிர்கள். இவை இரண்டும் அல்லாத பிற உயிர்களும் என்பது பிறவும் என்பதால் உணர்த்தப்பட்டது.

உடம்பால் உணர்ந்து கொள்ளக் கூடிய மூங்கில், புற்கள், கொடிவகைகள், செடிகள், இந்த இனத்தைச் சேர்ந்தவை. அடுத்து இருவகை அறிவு உயிர்கள்.

"நந்தும் முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(பொருளதிகாரம், மரபியல்-நூற்பா29)

நந்து - சங்கு, சங்கு, நத்தை, மிளிஞ்சல் போன்றனவும் ஈரறிவு உடையன. பிறரால், பிறபொருட்களால் தாக்கப்படும் போது அறியும் உணர்வும், உணவை உண்பதால் வாய்(நா) உணர்வும் இரு அறிவுக்குரிய அமைப்பாகும். இவை போன்ற பிற உயிர்களும் பட்டியலில் அடங்கும்.

"சிதலும் எறும்பும் மூவறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மேலது நூற்பா 30)

சிதல் - கறையான்

ஈசல், எறும்பு, கறையான் என்பனவற்றிற்கும் இவ்வினத்தைச் சேர்ந்தவற்றிற்கும் மூன்று அறிவு உண்டு. உடம்பால் உணர்தல், வாயால் சுவைத்தல், உண்ணல், மூக்கினால் முகர்தல், இவற்றின் தொழிற்பாடாம்.

மிருகங்களும் பறவைகளும் ஐந்து அறிவு உடையனவை. மக்கள் ஆறறிவு கொண்டவர்கள் தொல்காப்பியர் காட்டும் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த ஞானத்தை வெளிப்படுத்துகிறது.

இவ்வுயிர் இல அமைப்பை எண்பத்து நான்கு இலட்சம் எனச் சித்தர்கள் காட்டுகின்றனர். தேவர், மனிதர், விலங்கு, பறவை,

*A crow will overcome an owl in the day time; the king who would conquer his enemy must have (a suitable) time.* 481

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன இவ்வரிசையில் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேவர் | 11 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| மனிதர் | 9 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| மிருகம் | 10 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| பறவை | 10 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| ஊர்வன | 15 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| நீர்வாழ்வன | 10 | இலட்சம் | கரு | வேறுபாடு |
| தாவரம் | 19 | இலட்சம் | கரு | வேறுபாடு |

மொத்தம் 84 இலட்ச யோனிபேதம். இந்த நால்வகைத் தோற்றமும் (முட்டை, கரு, கிழங்கு, வியர்வை) எழுவகைப் பிறவிகளில் பிறந்து மனிதனாய்ப் பிறப்பது பிறவிப்பெருங்கடல் மகா சமுத்திரத்தை நீந்திக் கடந்ததுக்கு ஒப்பாகும். எனவே மனிதப் பிறவி விழுமியம் மிக்கது. இதை ஞான சம்பந்தர்

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறு
ஆயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள் பல
நடமாட வண்டுபாட
விரைசேர் பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே"

என்பாடுகின்றார். இந்தப் பிறவியில் எல்லாம் பிறந்து பிறந்து இளைத்துப்போன நிலையைப் பெருந்துறைப் பிள்ளை திருவாசகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"
(சிவபுராணம் 26-31)

பூடாய்- பூடு ஆகி. பூண்டு அல்லது சிறுசெடியாகி. விருகம்- மிருகம், கணங்கள் பூதகணங்கள். தேவருக்கும், மனிதருக்கும் இடையானது. தாவரம்- மரங்கள் (நிலத்தில் உள்ளன), சங்கமம்- அசைவன, புல், புல்லிற் துவங்கி அறிவோடு கூடிய மனிதர் வரை எத்தனையோ பிறவிகள் எடுத்தெடுத்தே இளைத்தேன் என மாணிக்கவாசகரும் பேசியுள்ளார். பிறவியின் அமைப்பும் பின் முன்னாக மாறியுள்ளன. காரணம் செய்யுள் அமைப்புக்காக இடம் மாறியுள்ளன. அருணகிரி நாதர் இருகைப் பலமோடி தாயுடன் அவமே உழலாதே- எனப் பாடியுள்ளார். விஞ்ஞானிகளும், மெய்ஞ்ஞானிகளும் பிராணிகளில் மேம்பாடு உடையது மனிதப் பிறவிதான் என உறுதிப் படுத்தியுள்ளனர்.

ஔவைப்பாட்டி இளங்குமரனான முருகனைக் கண்ட போது, கனிந்த பழங்களை ஆய்ந்து போட்ட பிள்ளைப் பெருமான் புலமை மிக்க அவ்வையின் வாய்மொழியாக அரிய, பெரிய, கொடிய, இனிய செய்திகளை உலகினருக்குப் பெற்றுக் கொடுக்க எண்ணிய போது அரிது அரிது எனப் பாட வைத்த அப்பாடல் "அரிது அரிது மானுடர் ஆதல் அரிது" என்றுதான் துவங்குகிறது.

அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிட ராதலரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது
தானமுந் தவமுந் தான் செய்வ ராயின்

புருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு 482
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் நாடு வழிதிறந் திருமே.

பிறப்பினால் கிடைத்தற் கரியது மனிதப் பிறவி. இப்பிறவியிலே ஊனமுற்றவர்களாகப் பிறத்தல்பாவம். எனவேமனிதப்பிறவியாய்ப் பிறந்தும், படித்து அறிவாளியாகி உயிருக்கு நன்மை பயக்கும் ஞானம் பெறுவது மேலானது. இவையெல்லாவற்றிலும் தவவழி வாழ்ந்து தானம் செய்தல் மிகமிக மேலானது. அதனால் அறியா முதிர சித்திக்கும் ஔவைப்பிராட்டி மிகத்தொன்மையான சைவம் சார்வழியிற் தன்னை வழிப்படுத்திய தாயுமானவரும் அடிபோற்றி மனிதப்பிறவி கிடையாதது. இந்த வாய்ப்புத் தவறின் இனி எப்பிறப்பில் இந்நிலை வருமோ, எந்நாளும் என்னாகுமோ என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தும் போது நமக்கும் அது நல்ல பாடமாகும்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏதுவரு மோஅறிகிலேன்"
(சித்தர் கணம்-1)

இவ்வரிசையிலே அப்பர் பிரான் தில்லை நகர் புகுந்து நடராஜனின் திருக்கோலத்தைக் கண்டதும், இக்கோலத்தைக் காண எத்தனைப் பிறவி எடுத்தாலும் கவலையில்லை என்று மனமகிழ்வோடு மனிதமே வேண்டுமென்ற அப்பர் (4:208) மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே, எனத் திருவாய் மொழிந்து அருளினார்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"
(திருமுறை 4:81:4)

அப்பர் பெருமானால் ஆக்கப்பட்ட நெடுந் தாண்டகம் அவரைத் தாண்டக வேந்தனாக்கி விட்டது. தாண்டகச்சதுரர் பொன்னம்பலத்தே கண்ட கவர்ந்திழுக்கும் காட்சியை இப்படி வடித்திருக்கிறார்.

"அந்தித்த கோவணத்தோ டெலும்பாபரண் சாங்குமலைக் கண்டீரோ கண்டோ -
மிந்நாள்
பந்தித்த வெள்விடையாய் பாய வேதிப்
படுகுலையே லென்கொலோ ஏந்திக்
கொண்டு
அந்திங்கிகள் வெள்வளையுங் காமு மெல்லா
மணிபாதம் நினைந்தி கொள்ளக்
கொள்ளப்
பொன்றி மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே"
(திருமுறை 6:2:9)

இம்மனிதப் பிறப்பு ஒப்பற்றது என்பதைப் பாரதியாரும் போற்றுகின்றார்.

"மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை ஈனர்கள் ஓர்ந்திலரே- அவர்
ஊனுடல் தீயினும் உண்மைநிலை கெடல்
உடன்பாடு வாரலன்றோ?"
(பாரதியார் சுதந்திரம் 3-4)

ஆக வாய்த்த இப்பிறவியைப் பயன்படுத்திப் பெருவாழ்வு காண்போமாக.

கடாரிடைப் போகார் கலங்கே ழுமியார்
இடரெனினும் மாக்கள் நிழற்கண்மேற் கொள்ளார்
படைவரினும் மடையவிழ் வரிபுனரிவள் போகார்
பகரிலை பாவை யுதிப்பர் பெயர்ந்துங்
கடவதி னாட்சி யவர்.
(ஆசாரக்கோவை)

பொருள்: ஒருவருக்கும் விலக்கிக்கும் நடுவுடனேதுப் போகார். கடலின் மேல் ஏறியார். தமக்குக் குனிரால் இடரெனிலும் பிறருடைத்த மாக்களின் நிழலிடையும் பற்றவும் பெற்போர்ப்பதும் செய்து கொள்ளார், படைவருகையினும் தாழ்ந்த ஆடைக் காற்றுப் பிறர்மேல் உதறார் போகார். பலர் நடுவண் நின்று உடையை உதறார் ஒழுக்கமுறும் கடப்பாட்டை அறிந்த அறிவுடையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி..........

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

**ஓமத்திரவியம் பதினெட்டாவன:-** விறகு, நெய், பால், தயிர், துவரை, பொரி, கடுகு, சமித்து, பயர், பணியாரம், வெல்லம், பொரிமா, தேன், தழைச்செந்நெல், உழுந்து, சம்பா நெல், எள்ளு, சருப்பாயிய அமுது என்பன. இவை தவிர ஏனைய பதார்த்தங்களும் ஓமத்திற்காகும். இவ்வாறு ஓமத்திரவியம் அறிந்துகொள்க.

ஓமஞ்செய்யும் அக்கினி குண்டத்தில் விறகாக இருக்குமிடம் செவி, அதில் ஓமஞ்செய்தால் வியாதியுண்டாகும். புகை இருக்குமிடம் மூக்கு, அதில் ஓமஞ் செய்தால் துக்கமுண்டாகும். சிறிது எரியுமிடம் கண்கள், அதில் ஓமஞ்செய்தால் தான் இருக்கும் ஊருக்கு அக்கினியினால் கெடுதல் உண்டாகும். கனலாயிருக்குமிடம் சிரசு, அதில் ஓமஞ்செய்தால் துக்கம் நேரிடும். ஆகையால் அக்கினியினுடைய சுவாலையாகிய சிகையில் ஓமஞ்செய்ய வேண்டும்.

அக்கினி லக்ஷணத்தைக் கொண்டு சிஷ்யனுடைய சுபாசுபலக்ஷணம் அறியும்படி நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

குண்டத்தில் அக்கினிலக்கணம் ஆறு வகையாகக் கூறப்படும். அவையாவன: வர்ணம், சப்தம், கந்தம், சுவாலை, தூமம், சரணம் என்பன. அவற்றில் வர்ணமாகிய நிறம் பதினொரு வகைப்படும். சப்தம் ஐந்து வகைப்படும். கந்தமாகிய பரிமளம் பதின்மூன்று வகைப்படும். சிகையாகிய சுவாலை ஐந்து வகைப்படும், தூமமாகிய புகை நான்கு வகைப்படும், சரணமாகிய கதிபேதம் பன்னிரண்டு வகைப்படும். ஆக இவ்வாறு அக்கினி இலக்கணம் ஐம்பது வகைப்படுமென அறிந்து கொள்க. இவ்வாறு கிரியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. கபிலோத்தரம் என்னும் உபாகமத்தில் இன்னும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

**இனி சிஷ்யலக்ஷணம் அறியுமுறை வருமாறு:-** பிராமணக் கொலை, ஆசிரியக் கொலை, குருவின் மனைவியைப் புணர்தல், பசுவைக்கொல்லுதல், செய்நன்றி மறத்தல், கள்குடித்தல் என்னும் இந்தப் பாவங்களைச் செய்தவனுக்கு அக்கினி கருமை நிறமுடையதாயிருக்கும். பூமியைத் திருடினவனுக்கு அக்கினி அசுத்த வாசனையுடையதாயிருக்கும். தன்னுடைய தலைவியைக் கொலை செய்தவனுக்கு அக்கினி பிண வாசனையுடையதாயிருக்கும். மகளிரைக் கொன்றவனுக்கு அக்கினி பிரமித்தலை உடையதாய் இருக்கும். சுவர்ணத்தைத் திருடினவனுக்கு அக்கினி நடுங்கும். சிசுக்கொலை செய்தவனுக்கு அக்கினி துடிக்கும். கருப்பத்தைக் கெடுத்தவனுக்கு அக்கினி காந்தியில்லாதிருக்கும். இவ்வாறன்றி உச்சித்திலத முதலிய புஷ்பத்தின் நிறம் போலும், இந்திர கோபப் பூச்சியின் நிறம்போலும், அக்கினி சிவந்திருந்தால் தீக்ஷை பெற்றுக் கொள்பவனுக்கு மிகுந்த நன்மை உண்டு. கற்பூரம், அகில், சந்தனம், கஸ்தூரி முதலிய நல்ல வாசனையுண்டாயின் சிஷ்யன் சுகியாயிருப்பான். வீணை முதலிய இனிய சத்தம் உண்டாயின் சிஷ்யன் இம்மையிலும், மறுமையிலும் உயர்ந்தவனாக இருப்பான். அக்கினியின் சுவாலையானது கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, நடு என்னும் இந்தத் திக்குகளில் சார்ந்திருந்தால் சிஷ்யன் பெரிய தனவானாக இருப்பான்.

அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் 483

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை வெளுத்திருந்தால் சிஷ்யன் இராஜயோகமுடையவனாக இருப்பான். அக்கினியின் குறிகளைக் கொண்டு சிஷ்யனுடைய இலக்கணங்களை அறிந்து, நல்லாசிரியன் சிஷ்யனுக்குத் தீக்ஷை செய்து வைக்க வேண்டும். அக்கினியில் குறிகள் பொல்லாதனவாயிருந்தால் பிராயச்சித்தம் செய்து தீக்ஷை செய்து வைக்க வேண்டும்.

**பஞ்சாசன இலக்கணம் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.**

சம்புவாகிய ஸ்ரீ மகாதேவருக்கு அனந்தாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனம், விமலாசனம் என்று ஐந்து ஆசனங்கள் உண்டு. அவற்றுள் அனந்தாசனம் மூன்று கோணமுடையது. சிங்காசனம் நான்கு கோணமுடையது. யோகாசனம் நான்கு கோணமுடையது. பத்மாசனம் வட்டமாக விளங்குவது. விமலாசனம் ஆறு கோணமுடையது. இந்தப் பஞ்சாசனங்களுள், அபிஷேக சமயத்தில் அனந்தாசனம், சிங்காசனம் இரண்டும் பூஜிக்க வேண்டும். பரிவட்டம், உத்தரீயம், திருவாபரணம், சந்தனம், புஷ்பம் முதலியன அணியும் பொழுது யோகாசனமும், பத்மாசனமும் பூஜிக்க வேண்டும். அனுக்கிரகம் செய்யும் பூஜா சமயத்தில் விமலாசனம் பூஜிக்க வேண்டும். இவ்வாறு பஞ்சாசனம் பூஜிக்கும் முறைமை அறிந்து கொள்க. இந்தப் பஞ்சாசனமும் சிவாசனத்துள் அடக்கமாகும். எவ்வாறெனில், ஆதார சக்திமுதல் அனந்தார்ச்சனை முடியவாக அனந்தாசனம், தர்ம முதல் ஊர்த்துவச்சதம் முடிய சிங்காசனம், கந்தம் முதல் கிரந்தி முடிய யோகாசனம், உபதளம் முதல் கர்ணிகை வரை பத்மாசனம், கர்ணிகை விமலாசனம் என்க. இவ்வாறு பஞ்சாசனமுஞ் சிவாசனத்துள் அடங்கும் முறைமை அறிந்து சிவபூஜை செய்ய வேண்டும். யோகஜம் என்னும் சிவாகமத்தில் இவ்வாறு ஆசன இலக்கணம் சொல்லப்பட்டிருக்கின்றது.

**சிவார்ச்சனைக்குரிய உபசாரம் பதினாறு வருமாறு:-** பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், துவார பூஜை, அபிஷேகம், ஆசனமூர்த்தி மந்திரத்தால் அருச்சித்தல், ஆவாகனம், சந்தனம் முதலியன சமர்ப்பித்தல், நைவேத்தியம் சமர்ப்பித்தல், தூபம் சமர்ப்பித்தல், தீபம் சமர்ப்பித்தல், நித்தியாக்கினி காரியம் செய்தல், திருக்கரத்தில் பலிகோதகத்தை (உள்ளங்கை ஜலத்தை) வார்த்தல், தோத்திரஞ் செய்தல், பராங்முகார்க்கியங் கொடுத்தல், சண்டேசுவர பூஜை என உபசாரம் பதினாறுங் கண்டு கொள்க.

**இனி பஞ்சோபசாரத்தைப் பற்றிக் கூறுகின்றார்.**

கிழங்கு, மூலம், பலம், சந்தனம், புஷ்பம், அமுது முதலாயின பார்த்திவ (பிருதிவி) உபசாரம். பால், தயிர், திருமஞ்சனம், சர்க்கரை, வஸ்திரம் முதலியன ஜலமயமான உபசாரம். நெய்த்தீபம், ஆபரணம், இரத்தினம் முதலியன அக்கினி சம்பந்தமான உபசாரம். தூபம், சாமரம் முதலியன வாயு சம்பந்தமான உபசாரம். மணி, கீதம், முகவீணை முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். இவ்வாறு பஞ்சோபசாரங்கள் கண்டு கொள்க.

**பன்னிரண்டு மாசத்திற்கும் மாசபூஜை வருமாறு:-** மார்கழி மாதத்தில் நெய்யபிஷேகம், தை மாதத்தில் தேனபிஷேகம், மாசி மாதத்தில் நெய்க்கம்பளம், பங்குனி மாதத்தில் வடிகட்டின பசுந்தயிர், சித்திரை மாதத்தில் மருக்கொழுந்து, வைகாசி மாதத்தில் சந்தனம், ஆனி மாதத்தில் முப்பழம், ஆடி மாதத்தில் திரட்டிப்பால், ஆவணி மாதத்தில் வெல்லஞ்சர்க்கரையும், புரட்டாசி மாதத்தில் பணியாரம், ஐப்பசி மாதத்தில் சம்பா அன்னம், கார்த்திகை மாதத்தில் தீபவரிசை. இவ்வாறு பன்னிரண்டு மாதத்திலும் மாச பூஜை செய்ய வேண்டும்.

*Is there anything difficult (for him to do), who acts with (the right) instruments at the right time?* 483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்நலிங்கம் எட்டு விதமாகும். அவையாவன:** - வச்சிரலிங்கம், மாணிக்கலிங்கம், வைடூரியலிங்கம், ஸ்படிகலிங்கம், பவளலிங்கம், இந்திர நீலலிங்கம், கோமேதக லிங்கம், மரகதலிங்கம் என்பன. இந்தலிங்கங்களுள், வச்சிரலிங்கத்தைப் பூஜித்தால் சத்துருஜயம் உண்டாகும். மாணிக்கலிங்கத்தைப் பூஜித்தால் ஐசுவரியமுண்டாகும். வைடூரியலிங்கத்தைப் பூஜித்தால் நல்ல புத்திரன் உண்டாவான். ஸ்படிகலிங்கத்தைப் பூஜித்தால் சகலசித்தியுமுண்டாகும். பவளலிங்கத்தைப் பூஜித்தால் சகல வசியமும் உண்டாகும். இந்திர நீலலிங்கத்தைப் பூஜித்தால் தனம் உண்டாகும். கோமேதகலிங்கத்தைப் பூஜித்தால் அழகுண்டாகும். மரகதலிங்கத்தைப் பூஜித்தால் நல்ல போகமுண்டாகும். இவ்வாறு சிந்தியவிசுவமென்னும் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**உலோகலிங்கம் எட்டு விதமாகும். அவையாவன:-** சுவர்ணலிங்கம், வெள்ளிலிங்கம், செம்புலிங்கம், வெண்கலலிங்கம், துத்தநாகலிங்கம், ஈயலிங்கம், அரக்குலிங்கம், இரும்புலிங்கம் என்பன. இந்தலிங்கங்களுள், சுவர்ணலிங்கத்தைப் பூஜித்தால் சம்பத்துண்டாகும். வெள்ளிலிங்கத்தைப் பூஜித்தால் இராச்சியமுண்டாகும். செம்புலிங்கத்தைப் பூஜித்தால் நல்ல புத்திரன் உண்டாவன். வெண்கலலிங்கத்தைப் பூஜித்தால் ஜனங்களுடையவிரோதமுண்டாகும். துத்தநாகலிங்கத்தைப் பூஜித்தால் உச்சாடனமுண்டாகும். ஈயலிங்கத்தைப் பூஜித்தால் வியாதியுண்டாகும். பித்தளைலிங்கத்தைப் பூஜித்தால் ஆயுள் உண்டாகும். இரும்புலிங்கத்தைப் பூஜித்தால் மரணமுண்டாகும். இவ்வாறு உலோகலிங்கங்களும் அவற்றைப் பூஜிப்பதாலுண்டாகும் பலன்களும் அறிந்துகொள்க.

**க்ஷணிகலிங்கம் பதினாறு வகைப்படும். அவையாவனவை:-** மணல்லிங்கம், அரிசிலிங்கம், அன்னலிங்கம், மண்லிங்கம், கோமயலிங்கம், வெண்ணெய்லிங்கம், பழலிங்கம், மாவுலிங்கம், சந்தனலிங்கம், தெற்பைலிங்கம், விபூதிலிங்கம், உருத்திராக்கலிங்கம், புஷ்பமாலாலிங்கம், சர்க்கரைலிங்கம், அப்புலிங்கம், தளிர்லிங்கம் என்பன. இந்த லிங்கங்களுள் மணல்லிங்கத்தைப் பூஜித்தால் முத்தியுண்டாகும். அரிசிலிங்கத்தைப் பூஜித்தால் போகமுண்டாகும். அன்னலிங்கத்தைப் பூஜித்தால் ஆயுள் உண்டாகும். மண்லிங்கத்தைப் பூஜித்தால் ஆத்மசுத்தியுண்டாகும். கோமயலிங்கத்தைப் பூஜித்தால் வியாதியில்லை. வெண்ணெய்லிங்கத்தைப் பூஜித்தால் சரீரதிடம் உண்டாகும். பழலிங்கத்தைப் பூஜித்தால் சௌபாக்கியமுண்டாகும். மாவுலிங்கத்தைப் பூஜித்தால் இஷ்டசித்தியுண்டாகும். சந்தனலிங்கத்தைப் பூஜித்தால் ஸிரியமுண்டாகும். தெற்பைலிங்கத்தைப் பூஜித்தால் தேஜசு உண்டாகும். விபூதிலிங்கத்தைப் பூஜித்தால் பாக்கியமுண்டாகும். உருத்திராக்கலிங்கத்தைப் பூஜித்தால் பாவம் நீங்கும். புஷ்பமாலாலிங்கத்தைப் பூஜித்தால் உருத்திரசாருப்பியபோகம் உண்டாகும். சர்க்கரைலிங்கத்தைப் பூஜித்தால் சந்தோஷமுண்டாகும். அப்புலிங்கத்தைப் பூஜித்தால் சாம்ராஜ்யமுண்டாகும், தளிர்லிங்கத்தைப் பூஜித்தால் நல்லகுணமுண்டாகும் என்க. இந்தலிங்கங்களைத் தவிர க்ஷணிகலிங்கம் இன்னும் பலவுண்டு. இவற்றுள் மணல்லிங்கம், அன்னலிங்கம், அரிசிலிங்கம், என்னும் மூன்றும் பிராமணசைவர்கள் பூசித்தற்கு உரியன.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் 484

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் காத்த ஈழத்து அறிஞர்கள்

பேராசிரியர் கணேசலிங்கம்

"முன்னிருந்த எங்கள் சமயாசாரியர் தாம் தரிசனஞ் செய்யப் போன தலங்களில் எல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தான் போன இடங்களில் எல்லாம் லோகோபகாரமான பிரசங்கங்கள் செய்து வந்தார்."

மேற்குறிப்பிட்ட வாசகங்கள் கு. கைலாசபிள்ளை என்பவரால் ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் கூறப்பட்டவை. சமய குரவருடன் தன்னை ஒப்பிடுவதை நாவலர் விரும்பாதவர். ஒரு சமயம் அவ்வாறு சமய குரவருடன் ஒப்பிட்ட சந்தர்ப்பத்திலே அவர் கோபங் கொண்டார் என்றும் இதே நூல்வாயிலாக அறிகிறோம். ஆனால் நாவலர் வரலாற்றை எழுதிய பலரும் நாவலரை ஐந்தாம் குரவர் என வர்ணிக்கத் தவறவில்லை.

## வாழ்வின் குறிக்கோள்

பக்தி இயக்கம் பெருமளவு காலப் பகுதியில் தோன்றியவர்கள் அருளாளர்கள். அவர்கள் அக் காலத்து அரசனையும், மக்களையும் கவர்ந்த சமண, பௌத்த சமயங்களை எதிர்த்தனர். அவர்கள் பிற மதங்களை எதிர்த்தும் சைவ சமய உண்மைகளை மக்களுக்குக் கூறாதிருந்தால் அன்று சைவம் அழிந்திருக்கும்.

இதே நிலையே நாவலர் காலத்திலும் இருந்தது. நாவலர் வாழ்ந்த காலத்தில் மேற்கே இருந்து வந்த கிறிஸ்தவர்கள் தமது கிறிஸ்தவத்தை உலகின் பல பாகங்களிலும் பரப்பத் தீவிர முயற்சி எடுத்தனர். கிறிஸ்தவத்தை ஓர் உலக சமயமாக்கும் முயற்சியில் மிஷனரிமார்கள் ஈடுபட்டார்கள். மிஷனரிமார் சுதேசிகளுடன் நெருங்கிப் பழகினார்கள். மக்களின் அன்பைப் பெற்றார்கள். மக்கள் மனதில் இடம் பிடித்தார்கள். சிறிது சிறிதாகத் தமது சமயத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதமாக எடுத்துக் கூறினார்கள். மக்கள் பலர் தமது பழமையான சமயமாம் சைவத்தைக் கைவிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைச் சென்றடைந்தனர்.

இந்நிலைமை நீடித்தால் யாழ்ப்பாணத்தில் சைவ சமயம் அழிந்து போய்விடும் என்பதை நாவலர் உணர்ந்தார். மதமாற்றத்தைத் தடுத்து, சைவத்தைப் பேணி மக்களுக்குத் தொண்டாற்றாவிடின் யாழ்ப்பாணம் ஒரு கிறிஸ்தவ நாடாகி விடும் என்பது அவருக்குத் தெரிந்தது. சைவத்தை வளர்ப்பதற்கு தனது வாழ்க்கையைத் தியாகம் செய்ய முன் வந்தார். சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்த குடும்பத்தில் பிறந்த அவருக்குப் பெண் கொடுக்கப் பலர் முன் வந்தும் சமுதாயத்திற்குத் தேவையானது எது என்பதை ஆராய்ந்தார். அதனைச் செயல்படுத்தத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இதுவே நாவலருடைய தனித்துவத்திற்குக் காரணமாகும்.

## பிரசங்க வழி

கிறிஸ்தவக் கல்லூரியாகிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்றும், பின்னர் கல்வி கற்பித்தும் வந்தவர் நாவலர். அதனால் கிறிஸ்தவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்குக் கையாண்ட வழிமுறைகளை அனுபவ வாயிலாக அறிந்திருந்தார். பாடசாலைகள் மூலமாகவும் கோயில் பிரசங்கங்கள் மூலமாகவும் கிறிஸ்தவர்கள் செய்த பிரசார முயற்சியை முறியடிக்க வேண்டும் என எண்ணினார். தானும் போல

*Though (a man) should meditate (the conquest of) the world, he may accomplish it, if he acts in the right time, at the right place.*

484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர் மக்களுக்காகத் தொண்டாற்றுபவர்கள். கிறிஸ்தவம் சைவத்தை அழித்துவிடும் என்பதை அறிந்தார். சுயமதம் நிறுவிப் பராத கண்டனஞ் செய்வதே சைவ சமயம் அழியா திருக்கச் செய்யும் வழி என நினைத்தார். தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வண்ணார் பண்ணைச் சிவன் கோவில் மண்டபத்திலே சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட பிரசங்கம் அவர் இறப்பதற்கு மூன்று மாதம் வரை அவராலும், அவரைச் சேர்ந்தோராலும் தொடர்ந்து நடாத்தப்பட்டது. மக்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் எளிய சொற்களைக் கையாண்டு, உறுதி பயக்கும் கருத்துக்களைச் சொன்னார். சைவ சமயத்தை நிறுவுவதற்குச் சைவத்தில் உள்ள குறை பாடுகளை எடுத்துக் கூறுதல் அவசியம் என்று உணர்ந்தார். சமயத்தில் உள்ள குறைகளை நீக்கி மக்களுக்குச் சமய உணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் "யாழ்ப்பாண சமய நிலை" என்ற கட்டுரையை வெளியிட்டார். அவரது கோயில்களில் வாண வேடிக்கை, நடனம், சங்கீதம் முதலியன நடைபெற்றன. இவற்றை விடுத்துக் கோயில்களில் சைவப்பிரசங்கம், தேவார திருவாசகபாராயணம், முதலிய வைகளைச் செய்யுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப் போய்ச் சைவப் பிரசாரங்களைக் கேளுங்கள். கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த மேலோரைக் குருமாராக ஏற்படுத்திக் கொள்ளுங்கள் எனத் துணிந்து கூறினார். நாவலருடன் படித்த வேங்கடாசல ஐயர் மகன் கார்த்திகேய ஐயரும் இடையிடையே பிரசங்கம் செய்தார். தில்லைநாத பிள்ளை, சதாசிவ பிள்ளை என்போர் பிரசங்கத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தனர். இப்பிரசங்கங்கள் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. கிறிஸ்தவப் பாதிரிமாரின் போதனையால் மனந்தடுமாறி உண்மைச்சமயம் எது எனத் தெரியாது தத்தளித்த சைவர்களுக்குச் சைவத்தின் பெருமை, சிவபக்தி, சிவதீட்சை, உருத்திராட்ச மகிமை என்பவற்றைப் பற்றி விளக்கிக் கூறினார். இப்பிரசங்கங்கள் மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுத்தன.

### பைபிள் மொழிபெயர்ப்பும் ஆசிரியத் தொழிலும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்பித்த சமயம் கல்லூரி அதிபராக இருந்தவர் பேர்சிவல் பாதிரியார். இப்பாதிரியாருடைய வேண்டுகோளுக்கிணங்க விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். இம் மொழி பெயர்ப்பு இன்று வரை சிறந்த ஒன்றாக விளங்குகின்றது. நாவலர் விவிலிய நூலை மொழி பெயர்த்தார் என்பதைக் கொண்டு அவர் கிறிஸ்தவத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்று கூறுவது தவறு. ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்க நாவலரிடம் கல்லூரி அதிபர் மொழிபெயர்க்கும் பணியை ஒப்படைத்தார். அப்பணியை நாவலரும் சிறப்புற நிறைவேற்றினார். நாவலர் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்திலேயே கிறிஸ்தவத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்திருக்கிறார். கிறிஸ்தவர்களின் வார்த்தைகளை உண்மையென நம்பி வாழ்ந்த பலரும் உண்மைச் சைவர்களாயச் சிவதீட்சை பெற்று வாழத் தொடங்கினர். சுதேசிகளுடைய அன்பைக் கவர்ந்து தமது சமயமே மெய்ச் சமயம் என்ற எண்ணத்தை உண்டாக்கிய பாதிரி மாருக்கு நாவலர் பிரசங்கங்கள் அச்சத்தைக் கொடுத்தன. பேர்சிவல் பாதிரியாருக்கு நாவலர் பண்டிதராய் இருந்து கொண்டு கிறிஸ்தவத்தை எதிர்ப்பதை அவர்கள் கண்டித்தனர்.

"நாங்கள் இத் தேசத்துக்கு வந்த
காலத்திலாவது அதற்கு முன்னாவது
சைவ சமயத்தவர்களுக்குள்ளே
இல்லாத காரியத்தை, உம்மிடத்திலே
தமிழ்ப் பண்டிதராயிருப்பவர் இப்போது

காதலி கருதி இருப்பர் கவின்கூடு
ஆசை கருது பவர் 480

செய்கின்றார். நாங்கள் இப்பிரதேசத்திற்கு வந்த காரணம் எங்களுடைய சமயத்தைப் பரப்புவதேயன்றிப் பிறிதொன்றுமன்று. அப்படியிருக்க எங்கள் சமயம் பொய்யென்றும் அதனைப் பரப்ப விடமாட்டேன் என்றுஞ் சபதங்கூறிச் சொல்லாலுஞ், செயலாலும் காட்டுகின்ற இவரை உமக்குத் தமிழ்ப் பண்டிதராக வைத்திருத்தல் ஆகாது."

என்று முறையிட்டனர். இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் உதயதாரகை (Morning Star) என்ற பத்திரிகை மூலம் தமது சமயக் கொள்கைகளை வெளியிட்டனர். அப்பத்திரிகையில் நாவலர் செய்யும் பிரசாரங்களைப் பற்றிக் குறிப்பெடுத்து அவற்றைத் தமக்கு எழுதி அனுப்புவோருக்குச் சன்மானம் கொடுப்பதாக விளம்பரம் போட்டார்கள். இவை நாவலர் பிரசங்கங்கள் கிறிஸ்தவர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தன என்பதை வெளிப்படுத்துகின்றன.

### இறுதிப் பிரசங்கம்.

நாவலருக்குத் தனக்குப் பின்னர் தன்னைப் போன்று ஒருவர் தோன்றிச் சமயத்திற்காக உழைப்பாரோ என்ற ஐயம் இருந்தது. அவருடைய உள்ளத்திலிருந்த கவலையை அவருடைய கடைசிப் பிரசங்கம் வெளிப்படுத்துகின்றது.

"நான் உங்களிடத்துக் கைமாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருஷ காலம் உங்களுக்குச் சைவசமயத்து உண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப்பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால் நான் உயிரோடு இருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போலப் படித்தவர்களும், சன்மார்க்கருமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம்."

அவர் கூறியது போலவே இதுவே அவருடைய கடைசிப் பிரசங்கமாக இருந்தது.

நாவலர் மனமுருகிக் கேட்டோர் உருகும் வகையில் ஆற்றிய அவருடைய இறுதிப் பிரசங்கம் வரலாற்று முக்கியத்துவம் உடையது. நாவலரின் பின்னர் தம்மை எதிர்ப்பார் இருக்க மாட்டார்கள் என மல்லினார்கள். நாவலரோ தனக்குப் பின்னர் தன்னைப் போல தொண்டாற்றுவோர் இருப்பரோ என ஐயுற்றார். ஆனால் நாவலர் ஆரம்பித்தப் பிரசங்க மரபு நாவலரின் பின்பு பல நாவலர்களைத் தோற்றுவித்தது. இம்மரபு தொடர்ந்து ஈழத்திலும், தென் இந்தியாவிலும் பிரபல்யம் பெற்றது. நாவலர் வழியில் சமயத் தொண்டாற்றப் பலர் முன்வந்தனர்.

### சபாபதி நாவலரின் பேச்சாற்றல்

கோப்பாயிற் பிறந்த சபாபதி நாவலர் தனது நாவன்மையால் நாவலர் என்னும் பட்டத்தைப் பெற்றவர். நாவலரைப் போலவே சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும், பிற மத கண்டனம் செய்வதிலும் புகழ் பெற்று விளங்கினார். சிதம்பரத்தில் ஆறுமுக நாவலரினால் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராக இருந்தவர். இவருடைய பிரசங்கங்கள் ஈழத்தில் மட்டுமின்றி, தென் இந்தியாவிலும் சிறப்பாகப் பேசப்பட்டன. சைவத்தின் பெருமைகளைப் பிரசங்கங்கள் வாயிலாக எடுத்துக் கூறிய சபாபதி நாவலர் மதம் மாறிய இந்துக்களையும் அவர்கள் போக்குகளையும் பிரசங்கங்கள் வாயிலாகக் கண்டித்தார்.

"அநித்தியமும், துக்கமும், இழிவும் பழியுமுள்ள பொய்ப் போகங்களை அநுபவித்தற் பொருட்டு நித்திய சுகமும், உயர்வும், புகழுமுள்ள வைதீக சமயங்களைக் கைவிட எண்ணுதல்

*They who thoughtfully consider and wait for the (right) time (for action), may successfully meditate on (the conquest of) the world.* 485

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோ! மேன்மக்களாகிய ஆரியர்களுக்கு எவ்வளவு மதிகேடு! எவ்வளவு அவமதிப்பு! எவ்வளவு பழி! எவ்வளவு பாவமாம்! வைதிக சமயிகளுக்குள்ளே வேறு சிலர் தரித்திரக் கொடுமையினால் அன்ன வஸ்திரம் பெற்று உடல் ஓம்பும் பொருட்டு விவிலிய சமயங் களிற்குள் பிரவேசிக்கின்றார்."

சைவம் அழிந்து விடும் என்ற பயம் இவர் மனதில் இருந்தமையால் மக்களுக்கு நல்லறிவு ஊட்டும் உபதேசங்களைச் செய்தார்.

## நாவலர் வழியில் செந்திநாதையர்

நாவலர் மரபில் ஒழுகியவர்களுள் சிறந்தவராகக் கொள்ளப்படுபவர் குப்பிளான் காசிவாசி செந்திநாதையர். இவர் நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் பலவற்றைத் தொடர்ந்து செய்தோர் வரிசையில் முதலிடம் பெறுகின்றார். அவருடைய கண்டனம் ஒன்றிலிருந்து "இந்து மராக்ஷ் ஸொஸைடி" என்னும் ஒரு சங்கம் அமைக்கப்பட்டதாகவும் அந்தச் சங்கம் இந்து சமயம் அழிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு அமைக்கப்பட்ட கோட்டை என்றும் அவர் கூறுகின்றார். இச்சங்கம் கிறிஸ்தவர்களுடைய பிரசங்கங்களை எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. கிறிஸ்தவர்கள் "சிவனுந் தேவனா" என்னுந் தலைப்பாக்கத்தில் சிவன் கடவுளல்லை என்று ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுச் சைவ சமயத்தைக் கண்டனம் செய்தனர். அதற்கு மறுப்பாக செந்திநாதையர் "சிவனும் தேவனா எனும் தீய நாவுக்கு ஆப்பு" என்ற தலைப்பாக்கத்தில் ஓர் கண்டனத்தை எழுதினார். இவை கிறிஸ்தவர்களுக்கும், சைவர்களுக்கும் இடையே செந்திநாதையர் காலப்பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலைக் காட்டுகின்றது.

"சிவனது இலக்கணங்களை அந்நூனைக் கிறிஸ்தவர்களுக்கு உணர்த்தப் புகுதல் சிறுபிள்ளைகளுக்குக் கிரகணவியல்பைக் காட்டுவதூஉம், பன்றிக்கு முன்னே முத்தைப் போட முயலலும் போலாம் முடியும்"5

என்ற வாசகங்களில் மனவருத்தத்தோடு, சைவ சமய உண்மைகளைச் செந்திநாதையர் கூறியது புலனாகிறது. கிறிஸ்தவ பாதிரிகளை வாதுக்கழைக்கும் துணிவு இவருக்கு இருந்தது. இலங்கை நேசன் என்ற பத்திரிகை வாயிலாக கத்தோலிக்கர்களின் பெரும் தலைவராகிய பிஷப் பொஞ்ஜீன் (Bishop Bonjean) என்பவரை வாதுக்கு அழைக்கிறார். அவ்வாதிலே தான் தோற்கும் பட்சத்தில் கிறிஸ்தவனாவேன் என உறுதியளிக்கின்றார். இவை இரு சமயங்களுக்குமிடையே இருந்த மோதலின் தீவிரத்தையும் தெரியப்படுத்துகின்றன. சைவர்கள் எழுதிய கண்டனங்களுக்கு "கத்தோலிக்க பாதுகாவலன்" என்ற கிறிஸ்தவப் பத்திரிகை மறுப்புத் தெரிவித்தது.

செந்திநாதையர் பாதிரியாரை நேரடி மோதலுக்கு அழைத்த சில நாட்களிலேயே கத்தோலிக்கப் பாதுகாவலனில் கோப்பாய் மாணாக்கன் என்ற பெயரில் ஒரு கடிதம் வெளிவந்தது. அதில்,

"சமயவாத விளம்பர வீர ஐய!

நீர் இலங்கை நேசன் வாயிலாக எவ்விதத்தாலு மிக்கச் சிறந்தோங்கிய ஓர் சாஸ்திரியானவரை வாதுஞ் செய்ய வாரும் வாரும் என முழக்கம் இடுகின்றீர். வாதிப்பதால் மாத்திரம் மெய் வேதத்தைக் கண்டு பிடித்தோரைக் காட்டுவீரா? அவ்வாறு யாராவது கண்டுபிடித்தனரென யாண்டும் கேட்டிலோம். வாதஞ் செய்யப்புகின் பொய்மதத்தோரும் அம்மதம் மெய்மதமெனப் பிடிவாதமாய் வாதிப்பர். வாதத்தினால் மெய்வேதத்தை நுகரலாமென உமக்குப் புலப்பட்டதெவ்வாறு? நீர் உமது புன்மதி கொண்டு யாவராலுமளப்பருந்தன்மைத்தாய ஞானமே திருமேனியாகக் கொண்ட பராபரனருளிய வேதத்தை அளவிடப் புகுந்தது "நரிவால் கொண்டு கிணற்றாழம் பார்த்தலை

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 486

[illegible]

பெயர்கூறும்." உமது கல்வித்திறமையையும், தருக்கப் பிரசண்ட வேகத்தையும் காட்ட விரும் புகிறேன் என்னுடன் வருக. யானும் வருகுதல்"

இங்ஙனம்

கோப்பாய் மாணாக்கர் 6

பெயர் குறிப்பிடாது கோப்பாய் மாணாக்கர் என்று எழுதிய கடிதத்திற்கு எந்த மூலையில் உம்மைத் தேடுவது? ஓ மாணாக்கர்களே! ஓ மாணாக்கர்களே! என்று ஓலமிடுவதா என வண்ணை நடு என்ற பெயரில் ஒரு கடிதம் வெளிவந்தது.

## நீர்வேலி சிவசங்கர பண்டிதர்

நீர்வேலிச் சிவசங்கர பண்டிதரும் சைவ சமய உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறியும், கிறிஸ்தவ பாதிரிமாரின் செயல்களைக் கண்டித்தும் செயலாற்றினார். இவருடைய கண்டன நூல்களைப் படிக்கும் போது விவிலிய நூலில் இவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவும் சைவ சமய நூல்களில் இருந்த ஆட்சியும் புலனாகின்றன. சங்கர பண்டிதர் அக்காலத்தில் பாதிரியாராக இருந்த கில்னர் பாதிரியாருக்கு எழுதிய கடிதம் ஒன்றைப் பார்க்குமிடத்துக் கிறிஸ்தவ சைவ மோதல் எத்துணை தீவிரமாக நடைபெற்றது என்பதை விளக்குகிறது.

" வண்ணார் பண்ணையின் மதவாத சபையினை அக்கிராசனாதிபதியாகிய கில்னர் பாதிரியவர் கட்கு விக்கியாபநம். நும்மவர் மதவாத சபையின் இலேசுவுப்பிய இங்கிலீசுக் கடிதத்தை மொழி பெயர்த்து அறிந்து கொண்டோம்.............. ஆறுமுக நாவலர் சங்கர பண்டிதர் என்பவர்கள் மதவாத சபையில் வாதஞ் செய்வதற்கு அஞ்சுகின்றனர் என்று இலங்காபிமானியில் பிரகடனஞ் செய்ததும் யாது கருதியோ அறியோம்..................நீர் வாதவிதி என்னும் நூற் கருத்தினை அமைப்பித்து விவரிக்கும் வாத விதிக்குட்பட்டுக் கிரமமாகச் சமயவாதம் செய்யும் கருத்துடையீராயின் யாம் வாதஞ்செய்வதற்குச் சிறிதும் தடையின்று.......... நும்மதமே நன்மதம் என சாதித்தாராய்ப் புகுந்த வாதியாகிய நீவிரே முன்னம் நும்மதத்தை மறுக்கப் புகர வேண்டும். புகின் நாம் நும்மதப்பிரமாணமே சாதனமாய் நும்மதம் மறுத்து நம்மதம் நிறுத்துவோம்.

இங்ஙனம்

நீர்வேலிச் சைவப் பிரகாச சமயிகளுள் ஒருவராகிய சிவசங்கர பண்டிதர் 7

கில்னர் பாதிரியாருக்கு இலங்காபிமானிப் பத்திரிகை வாயிலாகச் சங்கர பண்டிதர் எழுதிய இக்கடிதத்திலே பதினான்கு விதிகளைக் கூறி, இம் முறைகளுக்கு உட்படுவீராயின் நாம் வாதஞ் செய்யத் தடையாதுமில்லை. என்று பகிரங்கமாக அவரைக் கேட்கிறார். சங்கர பண்டிதருடைய கண்டனப்பிரசங்கங்களும், அவர் நூல்களும் கிறிஸ்தவர்களுக்கு அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தியது.

"சங்கர பண்டிதரும், அவர் சுற்றத்தினரும் சில வருடங்களாகக் கிறிஸ்தவ வேதாகமத்துக் கெதிராகப் பிரயாசைப்பட்டு ஓர் கண்டனம் பற்றுகின்றனர். சங்கர பண்டிதரும், வேறு சில வாலிபரும் எச்.டி.பொஸ்வெல் ஐயரிடத்து (H.D.Boswell) போய் அதை அந்தரங்கத்தில் தர்க்கித்துப் பார்ப்பதற்கு ஓர் சமயத்தை நியமிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவரோ இரு திறத்தவர்களுடைய கேள்வி மறுமொழிகளையும் ஓர் சைவனும், ஓர் கிறிஸ்தவனும் இருந்து எழுத வேண்டும் என்ற பொருத்தனையைக் கேட்டுக் கொண்டதேயன்றி வேறு யாதொன்றையும் கேளாமல் ஒரே முறையில் சம்மதித்தார்.....8

சத்தியப்பிரியன் என்பவர் எழுதிய மேற்கூறிய கடிதத்தின்படி சங்கர பண்டிதர் எழுதிய கிறிஸ்து மத கண்டனத்தைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தனர் என்பதையும், கிறிஸ்தவ, சைவ கருத்து மோதல்கள் நடைபெற்றமையையும் அறிய முடிகின்றது. சங்கர பண்டிதர் கிறிஸ்தவ மத கண்டனம், மிலேச்ச மத விகற்பம்,

*The self-restraint of the energetic (while waiting for a suitable time to act) is like the drawing back of the foot of a fighting ram in order to butt.* 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்பிரசங்கம். என்ற கண்டன நூல்களையும் எழுதினார். இவற்றில் கிறிஸ்தவ மத நூல்களைப் படித்து, இருமத நூல்களையும் ஆதாரமாகக் கொண்டே உண்மையை நிறுவியுள்ளார் என்பதைக் காண்கிறோம்.

## குமாரசுவாமிப் புலவர்

கிறிஸ்தவ மதத்தை எதிர்க்கும் இயக்கத்தை நடத்திச் சென்றவர்களுள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் குறிப்பிடக் கூடிய ஒருவர். இவர் கண்டனங்கள் விறுவிறுப்போடு கூடியனவாய் சைவ சமய உண்மைகளை நிறுவிக் கிறிஸ்தவ எதிர்ப்புக்களை நீக்குவதாய் விளங்கின.

உன் "சைவ கண்டனம்" ஒருவரியேனும் பிழைபட எழுதவறியாது. சைவ நூலுமறியாது பாபர், நீர் முதலிய சொல் விளம்பி விட்டுக் கொண்டு வெளிப்பட்ட நீயா சைவ தூஷணஞ் செய்யத் துணிந்தாய்..............பொய் ஏன் சொல்லுகிறாய்? பொய்யன் நாசமடைவான்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை 10

இப்படிப்பட்ட கண்டனங்களை விட இலங்கை நேசன் பத்திரிகையில் "கிறிஸ்து தேவனா" என்றும் உதயபானுவில் நற்புத்தி என்றும், கிறிஸ்தவ வித்தியாலய பாதுகாவலன், பத்திராதிபருக்கு என்றும் கண்டனங்கள் எழுதினார். சங்கர பண்டிதர் எழுதிய மிலேச்ச மதவிகற்பம் என்ற கண்டன நூலைக் கும்மி ரூபத்தில் எழுதினார். இவ்வாறு எழுதிய நூல் பலரும் இந்நூற்கருத்துக்களை விளங்கிக் கொள்ள முடிந்தது. குமாரசாமிப் புலவர் பிற்காலத்தில் கிறிஸ்தவ சமயம் பரவும் வேகம் குறைந்ததன் காரணமாயும் கிறிஸ்தவமத கண்டனங்கள் எழுதுவதைக் குறைத்துக் கொண்டார்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் தொடக்கம் சுதேசிய இயக்கங்களும், எழுச்சியும் கிறிஸ்தவ மதத்தின் வீறினைக் குறைத்தன. மத கண்டனங்கள் தோன்றுவதற்கான தேவை குறைந்து விட்டது.

நாவலரும் அவருடைய மரபில் வந்தோரும் சைவ சமயத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்று வாழ்ந்தனர். அவர்களுடைய முயற்சியால் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவத்தின் செல்வாக்குக் குறைந்தது. பெருந் தொகையான சைவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவாது சைவர்களாக வாழ்வதற்கு இவர்களே காரண கர்த்தாக்களாவர். இவர்களுடைய வரலாற்றைப் பார்க்குமிடத்து இவர்கள் சைவ சமயத்திற்காகக் கடுமையாக உழைத்தார்கள் என்பது தெரிய வருகிறது. இப்படிக் கட்டிக் காக்கப்பட்ட சைவ சமயம் இன்று வேண்டாத வழிபாடுகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

## மேற்கோள்

1. கைலாச பிள்ளை. த, ஆறுமுக நாவலர் சரித்திரம்
2. வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை 1916 (பக் 36)
3. கைலாசபிள்ளை. த, மு.கு. நூல் (பக் 23)
4. கைலாசபிள்ளை. த, மு.கு. நூல் (பக் 32)
5. சபாபதி நாவலர், ஞானாமிர்தம். இலங்காதேவி அச்சகம், சங்கானை. (பக் 8)
6. பத்திரிகைக் கடிதம். இலங்கை நேசன், ஆனி 13.1848.
7. இலங்காபிமானிப் பத்திரிகைக் கடிதம் சித்திரை 1,1861.
8. மேற்படி மார்கழி 9, 1864
9. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை. அ. குமாரசுவாமிப் புலவர் வரலாறு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1970 (பக் 47)

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர் 487

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையும் சமய ஒழுக்கமும்

திருமதி. G.சுப்பிரமணியம்

மனிதன் மனிதனாக வாழவேண்டுமாயின் முதலில் அவனுக்குத் தன்னை அறியும் அறிவு அவசியமாகும். மனிதனுடைய உணர்வு வேறு. தான் யார் என்று அறிந்து கொள்ளும் அறிவு வேறு. மனிதனை இறைவன் ஏதோ ஒரு நோக்கத்திற்காகப் படைத்திருக்கின்றான். அதனை அறியாமல் மனிதன் வினைகளைச் செய்து கொண்டிருக்கின்றான். நன்மை, தீமைகள் மனிதனுக்குப் பிறப்பிலிருந்தே உருவாகின்றன. மனிதப்பிறவியை எடுத்ததனால் மட்டும் மனிதனாகி விட முடியாது. உண்மை, அன்பு, நீதி, தர்மம், சாந்தம், இன்னா செய்யாமை போன்ற தெய்வீகப் பண்புகளை வாழ்க்கையில் பேணி நடந்து கொள்வதன் மூலமே மனிதனாக முடியும். ஒழுக்கமான வாழ்க்கை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் எனச் சமயம் வலியுறுத்துகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் வாழ்க்கைப் பயன்கள். அவற்றை அடைவதற்குச் சமயம் காட்டும் வழியில் வாழ வேண்டியது அவசியமாகும்.

மனிதன் மனிதனாக வாழ மதநம்பிக்கை வேண்டும். பாவங்களைச் செய்து துன்பங்களை நாம் தான் அனுபவிக்கின்றோம். பற்றை ஒழித்து விட்டால் பாவம் செய்யாமல் இருக்கலாம். எல்லோரிடமும் இருக்கும் கடவுள் ஒன்று தான் என்ற மனநிலை மெய்யுடன் வந்து விட்டால் ஆசை ஏற்படாது. கோபம் உண்டாகாது, பாவம் செய்ய மாட்டோம். அதனால் உண்டாகும் மறுபிறப்பு இல்லை. பிறவித்துன்பம் இல்லை. எம்மைப் பெற்ற அன்னை எமது உடல் பசிக்குப் பாலூட்டுகின்றாள். ஆனால் எமது அறிவுப் பசிக்கு ஞானப்பாலை அளிப்பவள் அம்பாள் தான். அவளுடைய பாதார விந்தங்களை இறுகப் பிடித்தோமானால் மனிதப் பிறவி எடுத்தாலும் தெய்வமாக முடியும். இறைவன் எம்மை ஆட்கொள்ள எப்போ வருவான் என எதிர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர நாம் இறைவனை நொந்து கொண்டிருப்பதால் பயனில்லை.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் வினை செய்துகொண்டே இருக்கின்றான். அந்த வினையின் பயனை அனுபவிப்பவனும் அவனே. மனித வாழ்க்கையில் ஒவ்வொருவனுக்கும் ஏதோ ஒரு விதத்தில் பிரச்சினைகள் உண்டாகின்றன. தன்னைவிட உயர்ந்த வனைப் பார்க்காமல் தன்னைவிடத் தாழ்ந்தவனைப் பார்த்துத் திருப்திப்பட வேண்டும். ஆலயங்களிலும் பாதையோரங்களிலும் எத்தனை மனிதர்கள் கால், கை இல்லாமல், கண்தெரியாமல், நடக்க முடியாமல் இருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்து நாங்கள் இப்படி இருப்பதற்கு மிகவும் சந்தோஷப்பட வேண்டும். மனதைத் திருப்திப் படுத்துதல் வேண்டும். எனக்கு நகை, செருப்பு இல்லாவிட்டாலும் இரண்டு கைகள், கால்கள், இருக்கின்றனவே என்று பெருமிதப்பட வேண்டும்.

*The wise will not immediately and hastily show their anger; they will watch the time, and keep their anger within.* 487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையில் உயர்ந்த பண்பு களைக் கடைப்பிடிப்பதன் மூலம் இறைவனை அடையமுடியும். இறைவனை அடைவதற்குப் பக்தி மார்க்கமே எளிய சாதனமாகும். ஏழை, பணக்காரன், ஆண், பெண், கற்றவர், கல்லாதவர், சிறியவர், பெரியவர், என்ற வேறு பாடின்றி எல்லோரும் இறைவனை அடையப் பாடுபடலாம். நேரம், காலம், என்ற கட்டுப்பாடுகள் தேவை யில்லை. ஆன்மீகப் பாதையில் பயணம் செய்யத் தடையாய் இருப்பது நான் என்ற அகங்கா ரம்தான். இதனை முற்றாக நீக்கி விட வேண்டும். நீ தாழ்ந்தவன் நான் உயர்ந்தவன் என்பதனா லேயே உலகில் எல்லாப் பிரச்சினைகளும் உருவாகின்றன. எல்லோரிடமும் இருப்பது ஒரே பரம்பொருள்தான் என்பதை உணர்ந்து விட்டால் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை.

மனித குரோதம், பூமோஷம் போன்ற குணங்கள் மாறாதிருக்கின்றதனைக் காண் கின்றோம். மனதில் உள்ள கெட்ட குணங்கள் அவனுக்குப் பிற்காலத்தில் துன்பத்தையே கொடுக்கும். ஒருவருக்கும் கெடுதல் நினைக்காது துன்பம் செய்யாது வாழப்பழகிக் கொள்ள வேண்டும். நாம் செய்யும் தீமைகள் யாவும் திரும்பவும் எம்மையே வந்து சேரும் என்று உணர்ந்து கொண்டோமானால் துன்பத்தினைச் செய்யாது விட்டு விடுவோம். இன்பமாக வாழவேண்டும் என்ற ஆசை எல்லோ ருக்கும் இருக்கின்றது. வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒருவனைக் கேட்டால் வாழ்க்கை உண்மையானது என்று அடித்துச் சொல்லு கின்றான். ஆனால் அதே இளைஞன் வயதாகி அதிகம் அனுபவித்து விட்டுப் பெல்லவை உணர்ந்த போது இது விதி என்று அவனே சொல்லுவான். தன்னுடைய ஆசைகள் நிறைவேறு மாட்டாது என்பதனை அவனே உணர்ந்துக் கொள்கின்றான். வாழ்க்கையில் இன்பம், துன்பம், சுகம், துக்கம், செல்வம், வறுமை எல்லாம் கண நேரத்தில் தோன்றி மறைந்து விடுகின்றன. ஏன் வாழ்க்கை கூட கணநேரத்தில் மறைவதுதான். நன்கு ஆராய்ந்து பார்த்தால் கருணையே வடிவான பரம் பொருள் ஒன்றுதான் உண்மையானது என்ற உண்மை விளங்குகின்றது.

நமக்கு இந்த சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் எனக்கூறிய ஆறுமுகநாவலர் கூற்றினை எமது வாழ்க்கையில் கடைப்பிடித்து நாம் பிறவி எடுத்ததன் நோக்கத்தினை நிறைவேற்றுவோமாக.

பிறர்மனை கட்களவு சூது கொலைபொய்
துறந்திடா நெஞ்சத்து நோக்கார் நிரயமென்
றெல்லைப் படுவதூஉம் மன்றி நிரயத்துச்
செல்வழி யுய்த்திடுத லால்.

பொருள்: பிறர் மனைவியையும், கள்ளையும், களவையும், சூதையும், கொலையையும், பொய்யையும் துறந்திலர் ஒன்றோ மேன்று கருதார் ... நரகம் என்று ... நரகத்தின்கண் செல்லும் நெறியில் இவை செலுத்துதலான்.

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை 488
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்துக்கு அன்பளிப்பு



# வேதங்கள் கூறும் கடவுட் கோட்பாடு

மிக்கியவதி மிக்கியானந்தன்.

சென்ற கட்டுரையில் வேதங்கள் பற்றிய பொதுவான விடயங்களை நோக்கினோம். இக்கட்டுரையில் வேதங்கள் காட்டி நிற்கும் கடவுட் கோட்பாட்டையும் இக் கருத்துக்கள் இந்திய தத்துவ ஞானத்துறையில் ஏற்பட்ட கருத்து வளர்ச்சிக்கு எவ்வாறு அடிகோலியது என்பதையும் நோக்குவோம்.

## வேதங்களின் பிரிவுகள்

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று வேதங்கள் நான்கு வகைப்படும். இவை ஒவ்வொன்றிற்கும் மந்திரப்பகுதி, பிராமணப்பகுதி என இவ்விரண்டு பகுதிகள் உண்டு. இவற்றை விட ஆரணியங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றையும் வேதம் என்ற பெயராலேயே வழங்குதல் மரபு. இதில் மந்திரம் என்பது உச்சரிப்பவனைக் காப்பாற்றும் சொல் என்பது பொருள். ஆகவே மந்திரங்கள் யார் யார் தம்மை உச்சரிக்கின்றார்களோ யார் பொருட்டு அவை உச்சரிக்கப்படுகின்றனவோ அவர்களைக் காப்பாற்றும் இயல்புடையது என்பது தெளிவாகின்றது. இருக்கு வேதம் மந்திரப் பகுதிகளால் ஆனது.

மந்திரங்களை உச்சரிக்கும் போது ஆற்ற வேண்டிய செயல்கள் பற்றிக் கூறுவன பிராமணங்கள். இவை சடங்குகளின் தொகுப்பு ஆகும். ஆரணியம் என்றால் காடு என்பது கருத்து. இல்லறத்தானாக வாழ்ந்து வீட்டிலே பல கிரியைகளை இயற்றியவன் துறவறம் மேற்கொண்டு காட்டிலே வாழ நேரிடின் அத்தகைய கிரியைகளையும் வெளிப்படையாக மேற்கொள்வதற்கு அவனுக்கு அங்கு வசதியிருக்காது. அந்த நிலையிலே அவன் மானசீகமான முறையிலேதான் அனுட்டானங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்தகைய வேளையில் அனுட்டிக்க வேண்டிய முறைகளை விவரிப்பனவே ஆரணியங்கள். ஆகவே ஆரணியங்கள் கிரியை நிலையிலான பிராமணங்களையும், தத்துவ சிந்தனைகளின் தொகுப்பான உபநிடதங்களையும் இணைத்து நிற்கின்றன எனக் கூறுவது பொருத்தமானது. மந்திரங்கள் பிராமணங்கள் கூறும் விடயங்களின் தத்துவங்களை ஆராய்வதே உபநிடதங்கள் ஆகும். இதில் மந்திரங்கள் புலவர்களாலும் பிராமணங்கள் புரோகிதர்களாலும் உபநிடதங்கள் தத்துவ ஞானிகளாலும் ஆக்கப்பட்டவை என்று கொள்ளப்படுகின்றது. இதில் முதலில் மந்திரங்களும் பின்பு பிராமணங்களும் இறுதியாக உபநிடதங்களும் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் மந்திரங்கள் பிராமணங்களில் கூறப்படும் விடயங்களை மறுப்பதாகவே உபநிடதங்கள் எழுந்தன என்றும் டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறுகின்றார்.

## வேதங்கள் கூறும் தெய்வப் பிரிவுகள்

இயற்கையைப் பற்று நோக்கிய மனிதன் இயற்கையின் சில கூறுகள் தனக்குச் சாதகமாகவும், சில பாதகமாகவும் இருப்பதை உணர்ந்தான். சாதகமான இயற்கை நிகழ்வுகள் தொடர்ந்தும் நன்மைகள் செய்ய வேண்டும் என்றும், பாதகமானவற்றைச் சாந்தப் படுத்தும்

*If (a king) meets his enemy, let him show him all respect, until the time for his destruction is come : when that is come, his head will be easily brought low.* -488

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நோக்கிலும் வழிபாடாற்ற முற்படுகின்றான். மின்னல், முழக்கம், முகில், மழை, சூரியன், சந்திரன், நீர், நெருப்பு, காற்று என முப்பத்து மூன்று தெய்வங்கள் வேதகால வழிபாட்டில் இடம் பெற்றன. இத்தெய்வங்கள் விண்ணுக்குரியவை, மண்ணுக்குரியவை, விண்ணுக்கும் மண்ணுக்கும் உரியவை என மூன்றாக வகுக்கக் கூடியதாக உள்ளன என்பது அறிஞர் கருத்து. விண்ணுக்குரியவையாக வருணன், மித்திரன் போன்றவையும் மண்ணுக்குரியதாக அக்கினியும் இடைப்பட்ட நிலையில் உள்ளவையாக இந்திரன், வாயு ஆகிய தெய்வங்களும் கூறப்பட்டன. தனக்குக் கேடு செய்யாதிருப்பதற்காகவும், நன்மை செய்வதற்காகவும் கைமாறாகத் தன்னால் ஆன பொருட்களை வழங்குவதாகவும் கூறினான். இவ்வகையில் அக்கினியே மனிதனுக்கும் தெய்வங்களுக்கும் தொடர்பை ஏற்படுத்துபவனாகக் கருதப்பட்டான். ஒவ்வொரு தெய்வங்களுக்கும் மனிதன் கொடுக்கும் ஆகுதிகளை அவரவரிடம் சேர்ப்பிப்பதே அக்கினியின் முக்கியமான கடமையாகக் கொள்ளப்பட்டது. இதையொட்டியே இன்றும் தெய்வங்களுக்குச் சேர வேண்டிய பொருட்களை அக்கினியில் இடும் பழக்கம் காணப்படுகிறது.

மேலும் தெய்வங்கள் மனிதனின் ஒவ்வொரு செயலையும் அறிந்து அவதானித்துக் கொண்டிருக்கின்றன. மனிதர்கள் ஒழுக்கம் தவறினால் தெய்வ தண்டனைக்கு உட்பட நேரிடும் என்ற திடமான நம்பிக்கையும் காணப்பட்டது. வருணனே ஒழுக்கத்திற்குரிய காவலனாகக் கற்பிக்கப்பட்டதுடன் சூரியனையே அவனது கண்ணாகவும் வேதங்கள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளன. மனிதனின் எந்தச் செயலும் அவனது கண்களினின்றும் தப்ப முடியாது என்பதை உணர்த்துவதற்காகவே இவ்வாறு வர்ணித்துள்ளார்கள் போலும். இவற்றை நோக்கும் போது மனிதன் இயற்கையின் பல் வேறு அம்சங்களைத் தெய்வமாகக் கருதி அவற்றை அஞ்சியும், கெஞ்சியும், நயந்தும், வியந்தும் வேண்டிய வேண்டுதலாகவே வேதப் பாடல்களில் பெரும் பகுதி எனக் கொள்ளலாம். இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது வேதகால வழிபாடு இயற்கை வழிபாடு அல்லது பல தெய்வ வழிபாடு என்றுதான் கருதத் தோன்றும். அவ்வாறாயின் இவ் வேதங்களின் சிறப்பு என்ன? அவை இந்திய தத்துவ ஞானக் கருத்து வளர்ச்சிக்கு எங்ஙனம் அடிகோலின என்ற கேள்விகள் எழலாம். ஆயினும் வேதங்களில் கூறப்பட்ட விடயங்களை மிக நுணுகி நோக்கும் போது தெய்வங்கள் பற்றிய கொள்கைகளிலே பல தத்துவக் கருத்துக்கள் நுட்பமான முறையில் பொதிந்துள்ளதை நோக்கக் கூடியதாக உள்ளது.

## மூலகாரணம்

நமது காட்சிக்குப் புலனாகும் இயற்கையின் கூறுகளான நிலம், நீர், நெருப்பு என்பவற்றுடன் இந்த உலகம் முடிவடைந்து விடவில்லை. இவற்றின் தோற்றங்களும், இயக்கங்களும் எமது புறக்காட்சிக்குப் புலனாகாதவை. அதாவது காணப்படும் உலகம் காணப்படாத மூலத்திலிருந்து உருவாக்கம் பெறுகிறது என்பதைக் குறிப்பாக உணர்த்துவதோடு ஒவ்வொரு இயற்கை நிகழ்வுக்கும் ஒவ்வொரு தெய்வம் என வேத மந்திரங்கள் குறிப்பிடுகின்றன.

## காரண காரியத் தொடர்பு

காரியம் ஒன்று நிகழ்ந்திருப்பின் அதற்குக் காரணம் ஒன்று நிச்சயம் இருக்க வேண்டும். என்ற கருத்தானது தத்துவ ஆராய்ச்சி அடிப்படைகளுள் முக்கியமானது. மழைக்குக் காரணம் வருணன். மின்னலுக்கும் முழக்கத்திற்கும் காரணம் இந்திரன் எனக் கூறும் வேதப் பாடல்கள் இவ்வுலகில் நிகழும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒவ்வொரு காரணம் உண்டு

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். 489

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கிறது.

## ஒழுங்கும் ஒழுக்கமும்

இயற்கை நிகழ்வுகளில் ஒரு ஒழுங்கும் நியதியும் உண்டென்பதை உணர்த்தவே வேதகாலப் பாடல்கள் ஒவ்வொரு நியதிக்கும் ஒவ்வொரு தெய்வம் காரணம் எனக் கூறுகின்றன. இந்த ஒழுங்குகளெல்லாவற்றிற்கும் முக்கியமான தெய்வம் வருணன். அவனுடைய கட்டளையால் தான் இயற்கை அனைத்தும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இயங்குகிறது. உதாரணமாக நாற்புறமும் இருந்து எத்தனையோ பெரிய நதிகள் எவ்வளவு வெள்ளத்தைக் கொண்டு வந்தாலும் அவ்வெள்ளப் பிரவாகத்தால் சமுத்திரம் நிரம்பி வழிவதில்லை. இதற்கு வருணனின் கட்டளை தான் காரணம். இவ்வாறு இயற்கை நியதிகளை மட்டுமல்லாமல் மனித ஒழுக்கத்தையும் அவன் கண்காணிக்கின்றான். அவன் பார்வையிலிருந்து எச்செயலும் தப்ப முடியாது. இக்கருத்தானது பிற்காலத்தில் எழுந்த நல்வினை, தீவினை, தர்மம், அதர்மம், மறுபிறப்பு, முற்பிறப்பு, என்ற யாவற்றிற்கும் மூலமாக அமைகிறது. இந்த ஒழுங்கைக் குறிப்பதற்கு "ரிதம்" என்ற சொல்லை வேதப்பாடல்கள் கூறுகின்றன.

## ஒரு தெய்வ வாதம்

வேதப்பாடல்களைப் பொதுப்படையாக நோக்கும் போது அவை பல தெய்வக் கோட்பாட்டை வற்புறுத்துவன போலக் காணப்படினும் படிப்படியாக ஒரு தெய்வ வாதமே வற்புறுத்தப்படுவதை நாம் நோக்கக் கூடியதாக உள்ளது. முதலாவதாகத் தமது தேவையை ஒட்டி எந்தத் தெய்வத்திற்கு முக்கிய இடம் கொடுக்கின்றார்களோ அந்தத் தெய்வத்தை எல்லாத் தெய்வங்களிலும் முதன்மையானது என்று கருதுகின்ற தன்மை காணப்பட்டது. இரண்டாவதாகச் சில பண்புகளைக் குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற்கென்றில்லாமல் எல்லாத் தெய்வத்திற்கும் பொருந்தும்படி கூறுவது. இவை தனித்தனித் தெய்வங்களை விடுத்து ஒரே தெய்வங்களை நோக்கிச் செல்வதன் அடையாளங்களாகும். விஸ்வகர்மா, பிரஜாபதி எனத் தெய்வங்களுக்கு இடப்பட்ட பெயர்களும் ஒரு தெய்வக் கோட்பாட்டிற்கு வலுவான ஆதாரமாக உள்ளது. விஸ்வகர்மா என்பதன் கருத்து எல்லாக் காரியங்களையும் செய்யக் கூடியவன் என்பதாகும். பிரஜாபதி என்பது பிரஜைகளுக்கு அதிபதி என்ற கருத்தைப் புலப்படுத்துகிறது. ஒவ்வொரு நியதிக்கும் ஒவ்வொரு தெய்வம் என்ற கருத்து மறைந்து எல்லாம் வல்லவன் ஒருவனே என்ற கருத்துப் படிப்படியாக வலுப்பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இவை எல்லாவற்றையும் விட வேத சுலோகம் ஒன்று ஏகம் சத் உண்மைப் பொருள் ஒன்று. அதையே அறிஞர்கள் பல பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று கூறுகிறது. ஆகவே வேதத்தில் முக்கியமாகப் பேசப்படுவது ஒரு தெய்வக் கொள்கையே என்பது உறுதியாகிறது.

போகப் போக ஒரு தெய்வக் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டு தெய்வம் என்ற சொல் மறைக்கப்பட்டு மூலமாக உள்ளது. ஒரே ஒரு பொருள் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. அப்பொருள் அவன், அவள் என்ற பாகுபாட்டைக் கடந்தது. "சத்" என்ற சொல்லாலும் அது, ஏகம் என்ற சொல்லாலும் அந்த மூலப்பொருள் குறிப்பிடப்படுகிறது. ஆகவே பல தெய்வ வாதம் ஒரு தெய்வவாதமாகிப் பின் ஒருமை வாதமாக மாறிய கருத்து வளர்ச்சியையே வேதங்களில் காண்கின்றோம். இக் கருத்து வளர்ச்சிதான் பிற்காலத்தில் விரிவடைந்த வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களுக்கு மூலமாக அமைந்துள்ளது என்று கூறலாம்.

*"If a rare opportunity occurs, while it lasts let a man do that which is rarely done (with out such an opportunity).*
489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் காப்பு

மட்டுவில் ஆ. நடராசா

கந்தபுராணப் பாயிரத்தில் முதலில் இடம் பெறுவது காப்பு. விநாயகர் வணக்கம்.

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

என்று கூறி விநாயகப் பெருமானைப் போற்றித் துதிக்கின்றார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

விளங்குகின்ற பத்துத் திருக்கரங்களையும் செம்மையாகிய ஐந்து திருமுகங்களையும் உடைய சிவபெருமானது தேரின் சில்லாயமைந்த தாமரை நாயகனாகிய சூரியன், தாம் உதரபந்தமாய் அணிந்த பாம்பினது இரத்தினமாக இருக்கப் பெற்ற விகட சக்கர விநாயகரது மெய்ம்மையாகிய திருவடிகளைப் போற்றித் துதிப்போம் என்பது இந்தக் காப்புச் செய்யுளின் பொருள்.

திகட சக்கரம்- திகழ் + தச + கரம். தச- பத்து
கரம்- கை
சகடசக்கரம்- தேர்ச்சில்லு
அகட சக்கரம்- அகடு + அசக்கு + அரவு.
அகடு- வயிறு. அரவு- பாம்பு.

சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனப்படும் ஐந்து திருமுகங்கள் உண்டு. இவ்வரை முறையே நடுமுகம், கிழக்கு நோக்கிய முகம், தெற்கு நோக்கிய முகம், மேற்கு நோக்கிய முகம், வடக்கு நோக்கிய முகம் என்றுங் கூறுவராம்.

அவரது வலக்கரங்களில் சூலம், மழு, வாள், வச்சிரம், அக்கினி என்பனவும் இடக்கரங்களில் அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் என்பன இருப்பதாகவுங் கூறுவர்.

முன்னொரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன் வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்களும் பிரமதேவரை நோக்கி நெடுங் காலம் கடுந்தவம் புரிந்தனர். பிரமதேவர் அவர்களுக்கு முன் தோன்றி உங்களுக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டார். அசுரர் மூவரும் தமக்கு பொன், வெள்ளி, இரும்பு என்னும் உலோகங்களாலான முப்புரங்கள் வேண்டும் எனவும், அவை தாம் விரும்பிய போது பூமி முதலிய மூன்று உலோகங்களுக்கும் பறந்து செல்லக் கூடியனவாகவும் சிவபெருமானாலன்றி வேறொருவராலும் அழிக்க முடியாதனவாக இருக்க வேண்டுமெனவும் கேட்டு வரம் பெற்று அவற்றில் வாழ்ந்து வந்தனர்.

அசுரர் மூவரும் சிவபக்தர்களானாலும் தமது குலமுறைக்கேற்பப, முப்புரங்களோடு தேவர் வாழுமிடங்களுக்குச் சென்று அவர்களை அழித்து வந்தனர். அசுரர் செய்யுங் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாத தேவர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அசுரரை அழித்தருள வேண்டும் என்று கேட்க, தம்மடியவர்களாகிய அசுரரைத் தாம்

கொக்குறுக்க கூம்பும் மருக்கும் மற்றும் அதன்
[illegible] 480
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பது முறையாகாதெனச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

இதைக் கேட்ட விட்டுணு புத்தவடிவோடு முப்புரங்களுக்குஞ் சென்று மதபோதனை செய்து தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி, என்னும் மூவரையுந் தவிர்ந்த ஏனையோரை மதம் மாற்றிவிட்டு, மீண்டும் மேருமலைக்குச் சென்று சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தார். இதையறிந்த சிவபெருமான் முப்புரங்களை அழிப்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்யுமாறு அமரருக்கு அறிவுறுத்தினார். அவர் கூறியதைக் கேட்டு அகமிக மகிழ்ந்த தேவர்கள் சந்திரனையும், தாமரை நாயகனாகிய சூரியனையும் உருளைகளாகவும் மேலேழு கீழேழு உலகங்களையும் தட்டாகவும் ஆகாயத்தை ஆசனமாகவும் கொண்ட அதியற்புதமான தேரை அமைத்தனரென்பது புராண வரலாறு.

தக்கயாக சங்காரத்தின் போது விட்டுணு ஏவிய சக்கரப்படையை வீரபத்திரக் கடவுளது மாலையிலிருந்த தலையொன்று விழுங்கி விட்டது. அச்சக்கரத்தை வீரபத்திரக் கடவுளிடம் வேண்டிப் பெற முயன்ற போது சக்கரத்தைத் தலை விழுங்கியதால் அதை அத்தலையிடமே வேண்டிப்பெறுமாறு வீரபத்திரக் கடவுள் திருவாய் மலர்ந்தருளினார்.

விட்டுணுவின் பொருட்டுச் சக்கரத்தைப் பெறவிரும்பிய அவரது சேனாதிபதியாகிய விடுவசேனன் தனது கைகளையும், கால்களையும், வளைத்து, கண்களையும், மூக்கையும், வாயையும் அசைத்து விகடக்கூத்தாடினான். அதைக்கண்டோர் அனைவரும் சிரித்தனர். அப்போது சக்கரத்தை விழுங்கிய வெண்டலையுஞ் சிரித்தது. வெண்டலை சிரித்தபோது அது விழுங்கிய சக்கரம் கீழே விழுந்தது. விநாயகப் பெருமான் விரைந்து சென்று சக்கரத்தை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு ஒன்றும் அறியாதவர் போலிருந்தார். அதைக் கண்ட விடுவசேனன் விநாயகப் பெருமானுக்கு முன்பும் விகடக் கூத்தாடி வேண்ட விநாயகப் பெருமான் அச்சக்கரத்தை விடுவசேனனுக்குக் கொடுத்தருளினார். அதுகாரணமாகக் காஞ்சியில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமான் விகட சக்கர விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார்.

முன்னொரு காலத்தில் விநாயகப் பெருமான் கொண்ட விகடரூபத்தை நினைவு கூர்ந்த கச்சியப்பர் விகடசக்கர விநாயகரது உதரபந்தனமாயமைந்த அரவின் மணியாய் தாமரை நாயகனாகிய சூரியன் இருக்கின்றான் என்று கூறியதன் மூலம் விநாயக பரத்துவத்தை உணர்த்தியிருக்கிறார்.

விகடக் கூத்தாடிய விடுவசேனனுக்கே அவனது வேண்டுகோளை ஏற்றுச் சக்கரத்தை கொடுத்தருளியவர் விகடசக்கர விநாயகர். மெய்யன்போடு போற்றித் துதித்தால் அவர் நமக்கு அருள் புரியாதிருக்க மாட்டார் என்பது கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் நம்பிக்கை. இறைவனை நம்பினார் கெடுவதில்லை. அதனால் தாம் பாடத்தொடங்கிய கந்தபுராணம் இனிதாக நிறைவேறுமென்று கருதினார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

*At the time when (a king) should use self control, let him remain himself like a heron, and, like it, let him strike, when there is a favourable opportunity.* 490

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம்

ஆறுமுக நாவலர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்த நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம். ஆதலினால் மரணபரியந்தம் தங்கள் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் அவசியம். ஆகையால் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கு முறைகளைச் சொல்லுவோம்.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால் புத்தி தெளிவடையும், நரம்புக்குவாரத்து நீர் வற்றிப்புறும், பித்தம் நீங்கும், வாதபித்தங்கள் தத்தம் நிலையைப் பொருந்தும்.

காலையிலே சிலம்பமேனும், குதிரையேற்றமேனும், கால்நடையேனும் செய்து கொண்டு வந்தால் சரீரம் இறுகும், பசி உண்டாகும், வாதமும் கபமும் வலியும், ஆலஸ்யமும் நீங்கும், மலம் இறங்கும்.

காலந் தோறும் ஒழுங்காகப் போசனஞ் செய்து கொண்டு வருதல் போலவே, அதினின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ்செய்து கொண்டு வருதலும் ஆரோக்கியத்திற்கு ஏதுவாகும். நாடோறும் காலை, மாலை என்னும் இரண்டு நேரத்திலும் தவறாமல் மலமோசனஞ் செய்யும்படி பழகிக் கொள்ளல் வேண்டும். இடையிடையே மலசல மோசனஞ் செய்யவரினும் தடைப்படாது செய்தல் வேண்டும். மலசலங்களை அடக்கினால் வியாதி உண்டாகும். மலசலம் தங்காமல் இறங்குமாயின் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் பொருந்தும். சமாக்கினி உண்டாகும். வியாதிகள் அணுகாவாம். சமாக்கினியாவது திருப்தியாக உட்கொள்கின்ற அன்னபானீய முதலியவைகளை யெல்லாம் முறைமைப்படி காலவளவைக்கு மாறுபடாமல் நன்றாகத் தகிக்கும் உதராக்கினியாம்.

இயல்பாகிய துவர் உள்ள நூள் இலை கொம்பு என்பவைகளினாலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். இப்படி விளக்கினால் வாத பித்த சிலேஷ்மங்களினாலே பல்லினிடத்தும் அதன் வேரினிடத்தும் உண்டாகின்ற இருபத்து மூன்று ரோகங்களும் உண்டாகாவாம். பற்கள் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கும். செங்கல், மணல், கரி, பாளை, வைக்கோல் என்பவற்றினாலே பல் விளக்கலாகாது.

சரீரத்தில் உள்ள மயிர்க்கால்கள் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குகள் எல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பிரியும் பொருட்டு, நாடோறும் ஒழுங்காகச் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரல் வேண்டும்.

ஸ்நானத்துக்குப் பிராதக்காலமே உத்தம காலம். பிராதஸ்நானஞ் செய்தால் பசி உண்டாகும், நோய் அணுகாது. வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப் பார்க்கிலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும்.

சூரிய சந்திர கிரணம் படாத நீரும், காற்றுப் படாத நீரும், பாசி நீரும், அதிக சேறுள்ள நீரும், இலை உதிர்ந்த நீரும், புழு உள்ள நீரும், துர்க்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும். ஆதலினால் இவைகள், ஸ்நானம், சமையல், பானம் என்பவைகளுக்கு ஆகாவாம்.

ஸ்நானம் பண்ணி நெடுநேரம் ஈரத்தோடிருக்கலாகாது. உடம்பிலே ஈரஞ் சுவற்றினால் குளிர் உண்டாகும். அதனால் வியாதி உண்டாகும். ஆதலினாலே குளிரும் வியாதியும் உண்டாகா வண்ணம் சீக்கிரம் ஸ்நானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணி அது முடிந்த உடனே உடம்பிலே சற்றும் ஈரமில்லாமல் துடைத்து விட்டுத் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

மனமுயற்சியாலேனும் சரீரமுயற்சியாலேனும் உடம்பு இளைத்திருக்கும் பொழுதும், போசனஞ் செய்தவுடனும் ஸ்நானம் பண்ணலாகாது. பிள்ளைகள் காலையிலே ஸ்நானஞ் செய்யாது போசனஞ் செய்தால், ஐந்து நாழிகை நேரத்திற்குப் பின்பு ஸ்நானம் பண்ணல் வேண்டும்.

உடுக்கிற வஸ்திரங்களும் சயனிக்கிற படுக்கைகளும் சிறிதும் அழுக்கில்லாமற் சுத்தமாயிருத்தல் வேண்டும். சரீரத்தினின்றும் வெளிப்படும் அழுக்கானது வஸ்திரம் மெத்தை தலையணை முதலியவைகளில் ஒட்டிக் கொள்ளும் அவைகள் தோலோடு சம்பந்தப் பட்டால், அவைகளிலே படிந்திருக்கின்ற அழுக்கானது மயிர்க் கால்களை அடைத்து, வியாதியை விளைவிக்கும். படுக்கைகளை நாடோறும் காற்றிலே போடவேண்டும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ் செய்துவரல் வேண்டும். அகப்பட்ட பொழு தெல்லாம் போசனஞ் செய்யலாகாது. முன் புசித்த போசனம் முழுவதும் சீரணமாகி மிகப்பசி தோன்றிய பின்பு போசனஞ் செய்தல் வேண்டும். இப்படிச் செய்யாதொழிந்தால் புசித்த போசனஞ் செவ்வையாகச் சீரணமாகாது. அது மட்டோ பக்குவாசயத்திலே சிறிது சீரணமாய போசனம் புசித்த போசனத்தோடு கலந்து வியாதியை விளைவிக்கும்.

போசனம் பண்ணுமிடத்துத் தன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாதவைகளையும், காலவியல்போடு மாறுகொள்ளாதவைகளையும், சுவை வீரியங்களினாலே தம்முள்ளே மாறு கொள்ளாதவைகளையும் புசித்தல் வேண்டும். அப்படிப் புசிக்குமிடத்தும், அளவுக்கு அதிகமாகவேனும் அற்பமாகவேனும் புசிக்கலாகாது. போசனம் மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் செய்யும்.

போசனஞ் செய்யும் பொழுது சலபானம் பண்ணலாகாது. போசனம் முடிந்த பின்பே சலபானம் பண்ணல் வேண்டும். தாக மெடுத்தாலும் மீண்டும் மீண்டும் சலபானம் பண்ணலாகாது.

அதிக கடுமையுள்ள அன்னமும், நன்றாகச் சமையாத அன்னமும், குழைந்த அன்னமும், வைரிய அன்னமும், பழங்கறியும், கருணைக் கிழங்கில்லாத கிழங்குகளும் புசிக்கலாகாது.

நன்றாகச் சமைத்த துவரம் பருப்பைப் போசனத்தின் முதலிலே பசு நெய்யுடன் அன்னத்தில் கலந்து புசித்தால், ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடி சதை வளரும். அன்னத்தில் இட்டுண்ணும் கறிகளோடு துவரம் பருப்பு ரசம் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

போசன முடிவிலே புளித்த தயிருங் உப்பும் அன்னத்திற் சேர்த்துப் புசித்தால், முன் உண்ட பதார்த்தங்களின் உள்ள அஜீரணமும் நீங்கும். எல்லாப் பதார்த்தங்களும் சீரணமாகும். மோரும் அன்னமும் புசித்தால் பசி உண்டாகும். மேகநீரும் மூலமும் பாண்டுவும் கிராணியும் நீங்கும்.

ஊறுகாய் எல்லாம் உதராக்கினியை வளர்க்கும். அருசியைப் போக்கும். வாதபித்த சிலேஷ்மங்களைத் தொலைக்கும். ஆதலினாலே தயிர்ச் சாதத்தோடும், மோர்ச் சாதத்தோடும் ஊறுகாய் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

இரவிலே தயிரும், மோரும், கீரைகளும், கிழங்குகளும், கனிகளும் உண்ணலாகாது. பகலிலே பால் உண்ணலாகாது. இரவில் உண்ணத்தக்க கறிகளாவன துவரம் பருப்பு, அவரைப்பிஞ்சு, முருங்கைக்காய், முள்ளிக்காய், தூதுளங்காய் என்பவைகளாம்.

இரவிலே சேஷித்த அன்னத்தில் ஒரு சுக்குத்துண்டைப் போட்டு, ஆறிய வெந்நீர் விட்டு வைத்தல் வேண்டும். அந்தப் பழஞ் சோற்றைக் காலையிலே அந்த நீராகாரத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசித்தல் வேண்டும். அப்படிப் புசித்தால் வாத பித்தம் போம், தாகம் நீங்கும், பசி உண்டாகும்.

இரண்டு கால போசனமே உத்தமம், மூன்று கால போசனம் கொள்ள வேண்டுமானால், காலையிலே மூன்றே முக்கால் நாழிகை யுள்ளும், உச்சிக் காலத்திலே பதினைந்து நாழிகை யுள்ளும், இராத்திரியிலே ஏழரை நாழிகை யுள்ளும் போசனஞ் செய்தல் வேண்டும்.

சரீர முயற்சியேனும் மனமுயற்சியேனும் செய்து இளைத்தவுடனே போசனம் பண்ணலாகாது. போசனஞ் செய்தவுடனே கடுமையாகிய மனமுயற்சியேனும் சரீர முயற்சியேனும் செய்யலாகாது. போசனஞ் செய்தவுடனே நூறடி யுலாவலாகிய குறுநடை கொள்ளல் வேண்டும்.

காலை வெய்யிலிற் காய்ந்தால், வியாதிக ளெல்லாம் அணுகும். மாலை வெயிலிற் காய்ந்தால் வியாதிகள் அணுகாவாம். நெருப்பிற் காய்ந்தால் அதிமூத்திரமும் அதிதாகமும், இரத்தபித்த நோயும், இரத்தக் கொதிப்பும் உண்டாகும். சுடுகாட்டுப் புகை உடம்பிலே பட்டால் ஆயுளைக் கெடுக்கும். பனியிலும், மழையிலும், பெருங்காற்றிலும், பனிக்காற்றிலும் திரிதலாகாது.

சரீரத்தில் உள்ள இரத்தம் அசுத்தமாகிய காரிரத்தமாயின் வியாதி உண்டாக்கும். சுத்தமாகிய செவ்விரத்தமாயின் வியாதி உண்டாகாது. அசுத்தவாயுவைப் பூரித்தாற் செவ்விரத்தமும் காரிரத்தமாகும். சுத்தவாயுவைப் பூரித்தாற் காரிரத்தமும் செவ்விரத்தமாகும். ஆதலினாலே எப்பொழுதும் சுத்த வாயுவைப் பூரித்தல் வேண்டும். தன்னாலும், பிறராலும் இரேசிக்கப்பட்ட காற்றும் துர்க்கந்தம் அளாவிய காற்றும், அசுத்தமாகிய நச்சுக் காற்றாகும். காற்றில்லாத ஒடுங்கிய வீட்டினுள்ளும், நெருங்கிய சனக்கூட்டத்தினுள்ளும் இருக்கலாகாது. இருந்தால் அசுத்த வாயுவே பூரிக்கப்படும். அதனால் விளையுங் கேடு தற்காலத்தில் விளங்காதாயினும், சற்றே காலஞ் செல்லச் செல்ல இனிது விளங்கும்.

யாவரும் தாம் தூங்கும் அறையிலுள்ள காற்றுச் சுத்தமாய் இருக்கும் பொருட்டு அங்கங்கே வேண்டு மட்டுங் காற்று வீசப்பண்ணிக் கொள்ளல் வேண்டும். அறையினுள்ளே சுத்த வாயு வீச வேண்டுமாயின், ஒரு பலகணியாயினும் வைத்துக் கொள்ளல் வேண்டும். நிலமட்டத்தில் அசுத்த வாயு அளாவியிருத்தலினாலே, கீழே படுக்காது கட்டிலின் மேற் படுப்பதே உத்தமம்.

தோலிலே ஒளி படுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தை விளைவிக்கும். தரைமட்டத்திற் தாழ்வாயும் ஈரமாயும், இருளுள்ளதாயும் உள்ள அறையிலுள்ளே இருந்து வேலை செய்வோர் சரீரம் வெளுத்து வியாதி அடைகின்றனர். தோலை ஊடுருவிச் செல்லும் ஒளி அத் தோலுக்கு மாத்திரமன்றி இரத்தத்துக்கும் நயத்தைக் கொடுக்கும். அந்த நயம் அதன் வழியாக உடம்பு முழுதிலும் பரவும். ஆதலினால் வீடுகளும், மடைப்பள்ளிகளும், பள்ளிக்கூடங்களும், கம்மியர் சாலைகளும் காற்று வீசத்தக்கவைகளாய் மாத்திரமன்றி, வெளிச்சம் நன்றாகச் செல்லத்தக்கவைகளாயும் இருத்தல் வேண்டும்.

சூரிய கிரணமானது பயிர் செடி முதலிய தாவரங்களுக்குப் போலவே மனிதருக்கும் நன்மையைக் கொடுக்கும். நிழலிலே பயிர்கள் வெளுத்து, சூரிய கிரணம் படும் பயிர்களைப் பார்க்கிலும் மிகப் பெலங் குறைந்திருக்குமன்றோ? அது போலவே, இருட்டறைகளில் இருக்கும் மனிதர்கள் வெளுத்து, நல்ல வெளிச்சம் பொருந்திய வீடுகளில் இருப்பவர்களைப் பார்க்கிலும் மிகப் பெலங் குறைந்திருப்பார்கள்.

சுத்தவாயு உள்ள இடங்களில் நாடோறும் சரீரம் வேர்த்துக் களைக்கும்படி அதிக நேரம் வேலை செய்தல் வேண்டும். அது கூடாத போது, சுத்தவாயு உள்ள இடங்களிலே ஏது உலாவித் திரிதல் வேண்டும். உலாவுதலுக்கு மாலைப் பொழுதிலும் காலைப் பொழுதே உத்தம காலம். சூரியன் அஸ்தமிக்கும் காலத்திலும் பார்க்கப் பகற்காலத்தில் வேலை செய்தலே ஆரோக்கியத்திற்கு ஏதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந் தோறும் போசனம் ஒழுங்காகச் செய்து வருதல் போலவே சரீர முயற்சியும் ஒழுங்காகச் செய்துவரல் வேண்டும். சிலநாள் ஒழுங்காகச் சரீர முயற்சி செய்து கொண்டு வந்து ஒருநாட் செய்யாது விட்டால் அது ஒழுங்காகப் போசனஞ் செய்து கொண்டு வந்து ஒரு நாள் போசனஞ் செய்யாது விடுதல் போலும்.

குனிந்த நிலையிலும் பார்க்க நிமிர்ந்த நிலையே ஆரோக்கியத்தை விளைவிக்கும். ஆதலினால் இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், வேலை செய்யும் போதும், சரீரம் குனிந்த நிலையின்றி நிமிர்ந்த நிலையுடையதாயே இருத்தல் வேண்டும்.

நிமிர்ந்த நிலையினாலே சரீரத்து அவயவங்கள் யாவும் செவ்வையாக இயங்கப் பெற்று அழகுடையனவாய் விளங்கும். குனிந்த நிலையினாலே மார்பு ஒடுங்கி, வயிறு தாழ்ந்து தோள்கள் கவிழ்ந்து, சரீரம் நோயடையும். குனிந்த நிலையிலும் பார்க்க நிமிர்ந்த நிலையிலே நெடுநேரம் அதிக வேலை செய்யலாம். பிள்ளைகள் தலையுந் தோள்களும் கவிப் பழகும்படி ஒருபோதும் விடலாகாது.

குனிந்த நிலையிலும் பார்க்க நிமிர்ந்த நிலையிலே சுவாசக் கருவிகள் எல்லாம் செவ்வையாக இயங்கும். அப்பொழுது உண்டாகும் சத்தம் மிகத்தெளிவாக விளங்கும்.

உரக்கப் பாடுவதினாலும் வாசிப்பதினாலும் குரலுறுப்புக்கள் தேறிப் பலங் கொள்ளும். அதனாலே மார்பு ஆரோக்கியம் பெற்று வியாபிக்கும். சுவாசாசயங்களும் மிடறும், பெரும்பாலும் ஆரோக்கியத்தை அடையும்.

வார்த்தை வசனிக்குமிடத்து மிதமாக வசனித்தால் உள்ளறிவும் ஆரோக்கியமும் உண்டாகும். அதிகமாக வசனித்தால், இரசதாதுவும் இரத்ததாதுவும் கெடும். அதனாற் பித்தம் அதிகரிக்கும். அதனாற் சிலேஷ்மரோகம் பிறக்கும். அதனாற் சலரோகம் உண்டாகும்.

மனமும் சரீரமும் தாம் செய்த முயற்சியளவுக்கேற்ப இளைப்பாறல் வேண்டும். மனதையும் சரீரத்தையும் இளைப்பாற்றுவது நித்திரை. நித்திரைக்கு ஏற்றகாலம் பகற்காலமன்று இராக்காலமேயாம்.

பகல் நித்திரையானது பதினெட்டு விதவாதரோகங்களை விளைவிப்பதற்கு ஒரு வித்தாகும். பத்தியம் கொண்டவருக்கும் சூரிய வெப்பமும், உண் ஒளஷத வெப்பமும், பத்தியத்தினால் உண்டாகும் வெப்பமும் ஆகிய மூன்று வெப்பத்தோடு பகல் நித்திரையினாலாகும் வெப்பமும் கூடுமாயின் நேத்திர ரோகங்களும், இரத்தபித்த ரோகமும் உண்டாகும். பகல் நித்திரையினாலே இராநித்திரை குழம்பி விடும்.

இரவில் நித்திரை செய்யாதவரிடத்தே சித்தமயக்கம், மந்தம் முதலிய நோய்கள் வந்து பொருந்தும். அர்த்தராத்திரிக்கு முன் இரண்டு நாழிகை நேரம் நித்திரை செய்வது அர்த்தராத்திரிக்குப் பின் நான்கு நாழிகை நேரம் நித்திரை செய்வதற்குச் சமனாகும். ஆதலினால் இராத்திரியின் பிற்பாகத்தில் நித்திரை செய்வதிலும் முற்பாகத்தில் நித்திரை செய்வதே ஆரோக்கியத்திற்கு ஏதுவாகும். விடியற் காலத்தில் ஒருமுறை விழித்துப் பின் செய்யும் நித்திரை கனாக் காண்டற்கு ஏதுவாகி உரோகத்தை விளைவிக்கும். ஆதலினால் விடியற் காலத்து நித்திரையை இயன்றமட்டும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். நித்திரை செய்யாமையும் குறைந்த நித்திரையும் போலவே மிகுந்த நித்திரையும் வியாதிக்கு ஏதுவாகும். தூக்கம் உண்டாகும் முன் படுத்தால் நித்திரை வரும் வரையும் மனம் துர்விஷயத்திற் சென்று கேட்டை விளைவிக்கும்.

இரவிலே நெடுநேரஞ் செல்லுமுன் போசனஞ் செய்து கொண்டு அது சீரணமான உடனே சீக்கிரம் படுத்து நித்திரை செய்து, சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே விழித்தெழுந்து விடப் பழகிக்கொள்ள வேண்டும். உண்ட உணவு சீரணமாகுமுன் சயனிக்கலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயனிக்குமிடத்து வடக்குத் திக்கல்லாத திக்கிலே தலை வைத்து, இடக்கை கீழாகச் சயனித்தல் வேண்டும். கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவினதாகிய உயரமும், வேண்டிய மட்டினதாகிய நீளமும் உள்ளதாக இலவம் பஞ்சினாலே தைப்பித்த தலையணையின் மேலே சிரசு வைத்துப் படுத்தல் வேண்டும். கொண்டால் பாதாதி கேசம் வரைக்கும் உள்ள சந்துப்பந்துக்களும் நரம்புகளும் சமனாக இருக்கும். சிரசைப் பற்றிய நோய்கள் நீங்கிவிடும்.

வாரத்துக்கு இரண்டு தரமாயினும் ஒரு தரமாயினும் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும். பக்ஷத்துக்கு இரண்டு தரமாயினும், ஒரு தரமாயினும் க்ஷௌரஞ் செய்வித்தல் வேண்டும். ஒன்றரை மாசத்துக் கொருதரம் நசியம் இடல் வேண்டும். நான்கு மாசத்துக் கொருதரம் பேதி மருந்து உட்கொள்ளல் வேண்டும். ஆறு மாசத்துக் கொருதரம் வமன மருந்து உட்கொள்ள வேண்டும். பேதி யெனினும் ரேசன மெனினும் பொருந்தும். வமன மெனினும் சர்த்தி யெனினும் வாந்தி யெனினும் பொருந்தும்.

எண்ணெய் தேய்க்குமிடத்து, நாசிக்கு நான்கு துளியும், காதுகளுக்கு அவ்வாறு துளியும் விட்டு, சிரசிலும், உடம்பிலும், கால்களிலும் கூடிடாமல் தேய்த்து ஊறச் செய்து சருமமும், வேர்வையும் இல்லாவண்ணம் துடைத்தல் வேண்டும். நெய் தேய்த்துக் கொண்டால், பருப்பரைப்புத் தேய்த்தல் வேண்டும்.

எண்ணெயைக் கால்களில் இட்டாற் கண்ணோய் நீங்கும். கண்களில் இட்டாற் காது நோய் நீங்கும். காதுகளில் இட்டால் தலை நோய் நீங்கும். தலையில் இட்டால் எல்லா நோயும் நீங்கும்.

சித்திரை வைகாசி மாசங்களில் சூரியோதயமாகி ஐந்து நாழிகை யுள்ளும், ஆனி, ஆடி மாசங்களில் எட்டு நாழிகையுள்ளும், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாசங்களில் நாலு நாழிகையுள்ளும், மார்கழி, தை மாசங்களில் இரண்டு நாழிகையுள்ளும் அப்பியங்க ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

வாததேகிகள் பசு நெய் ஒரு பங்கு எண்ணெய் இரண்டு பங்கு ஆமணக்கு நெய் மூன்று பங்காகவும், பித்த தேகிகள் வெள்ளை ஒரு பங்கு ஆமணக்கு நெய் இரண்டு பங்கு பசு நெய் மூன்று பங்காகவும், சிலேஷ்மதேகிகள் ஆமணக்கு நெய் ஒரு பங்கு பசு நெய் இரண்டு பங்கு எண்ணெய் மூன்று பங்காகவும், முக்கூட்டு நெய் சேர்த்து ஸ்நானஞ் செய்வது உத்தமம்.

தைலந் தேய்த்து ஸ்நானஞ் செய்தால், அன்றைக்கும் மற்ற நாளும் புளிப்பும், தயிரும், மோரும், பாலும், பாகற்காயும், அகத்தியிலையும், சேர்க்கலாகாது.

கஷாயம், அரைத்த மருந்து, எண்ணெய் என்னும் இம்மூன்றும் ஒன்று கோடைக்காலத்தில் கொடுக்கத்தக்க மருந்தாம். மழைக் காலத்திலேனும், பனிக்காலத்திலேனும், கொடுத்தால் அம்மருந்துகளின் குணம் கெட்டு விடும். இம்மூன்று காலங்களிலும் நேர்வாளமாயினும், உப்பாயினுஞ் சேர்ந்த மருந்தைக் கொடுத்தால் விரைவாகப் பேதியாகும்.

> பொய்த்துறவை வேண்டா ஒழுக்கா நிலைநின்றும்
> ஐயத்தின் கட்சியார் சிந்தியார் - சிந்திப்பின்
> ஐயம் புகுவித்து அருநிரயத் துய்த்திடும்
> தெய்வமுஞ் செற்று விடும்.
>
> பொருள்:- பொய்யும் குறளையும் பிறர் பொருளைத் தாம் வௌவவேண்டும் மனமும் பிறர்க்கீயாமல் உள்ள பொறாமையும் என இவை நான்கினையும் ஐயாக்கி அறிவிலையுடையார் நினைப்பார். நினைப்பாரை பின் பிறகு புதுவித்து நரகத்தின் கண்ணேயும் புகுவித்துத் தெய்வமுங் கெடுத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிற் கொள்வதற்கு

தாரண

சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 01 | 13.04.2004 | செவ்வாய் | தாரண வருடப்பிறப்பு விஷு புண்ணிய காலம் பகல் 12.35 முதல் இரவு 8.35 வரை |
| 05 | 17.04.2004 | சனி | சனிப் பிரதோஷ விரதம் |
| 07 | 19.04.2004 | திங்கள் | அமாவாசை விரதம் |
| 08 | 20.04.2004 | செவ்வாய் | சிறுத் தொண்டர் குருபூசை |
| 09 | 21.04.2004 | புதன் | கார்த்திகை விரதம் |
| 11 | 23.04.2004 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| | | | மங்கையர்க்கரசியார் குருபூசை |
| 13 | 25.04.2004 | ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| | | | விறன்மிண்டர் குருபூசை |
| 20 | 02.05.2004 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | | | உமாபதி சிவாசாரியார் குருபூசை |
| 21 | 03.05.2004 | திங்கள் | சித்திரைச் சித்திரை |
| | | | இசைஞானியார் குருபூசை |
| 22 | 04.05.2004 | செவ்வாய் | சித்திரா பூரணை விரதம் |
| | | | சித்திரகுப்த விரதம் |
| | | | திருக்குறிப்புத் தொண்டர் குருபூசை 26 |
| | 08.05.2004 | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 29 | 11.05.2004 | செவ்வாய் | கூட்டசராபிஷேகம் |
| 31 | 13.05.2004 | வியாழன் | திருநாவுக்கரசர் குருபூசை |


எங்களிடம் ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநுணுக்க சிலை விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்டம், முத்துக்குடைகள், ஆலவட்டம், கருட்ட மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாகன மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

# கலையரசி

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.

தொ.பே: 2478885


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். –இதழ் நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




GeDora

Dream has Come True

*EXPRESS SERVICE*

***Housing Loans***

*Within*

**24 BUSINESS**

*Hours*

Hot Line / Fax: 01 2573510

NSB

Your Family Savings Bank


Regd No. QD/48/ News 2003 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org